ISSN 2792-1026

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

ஐந்தாவது அகவையை நோக்கிய பயணத்தில்...

www.magazine.skytamilnews.com skytamil.lk@gmail.com Thuninthelu Magazine

மாதந்தோறும் | இதழ் - 41 | 25 ஜூலை 2025

ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு (பிரைவேட்) லிமிடெட்
Sky Tamil Media Network (Pvt) Ltd
REGISTERED UNDER THE MINISTRY OF MASS MEDIA



இலங்கையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அங்கமெடில்லா தேசிய பூங்கா



மின்னணு கழிவுகளிலிருந்து தங்கத்தை மீட்டெடுக்க புதிய வழி அவுஸ்திரேலிய விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பு..!



ஈழத்திலிருந்து சரிகமபவில் கலக்கி வரும் இளங்கலைஞர் சபேசன்




வாய்ப் புற்று நோயிலிருந்து பாதுகாப்புப் பெறுவோம்



பேசும் பேனாக்கள்

நூல் :- கிராமிய சுகந்தம்
நூல் :- நிசாந்தம்





## கலாபூஷணம் இலக்கிய வித்தகர் கிண்ணியா சபீனா

அவர்களுடனான நேர்காணல்



ULTIMATE RESTAURANT

Next to Rawdat Al Khail Health Center,
B Ring Road, Doha - QATAR
+974 7731 2000 / +974 444 210

sky தமிழ்
Media Network

ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு (பிரைவேட்) லிமிடெட்
Sky Tamil Media Network (Pvt) Ltd
ස්කයි ටැමිල් මීඩියා නෙට්වර්ක් (ප්‍රයිවෙට්) ලිමිටෙඩ්
REGISTERED UNDER THE MINISTRY OF MASS MEDIA



**ஜே.எம்.பாஸித்**
ஸ்தாபக பணிப்பாளர்
ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகை



பொது முகாமையாளர்
ஹுபைப் முஸம்மில்



பிரதி முகாமையாளர்
அஸ்ரி இப்னு அமீர்



பிரதம ஆசிரியர்
எம்.எஸ்.எம்.ஸாகிர்

## ஆலோசகர்கள் :

புரவலர் ஹாசிம் உமர்
தெ. செந்தில்வேலவர் – பிரதம ஆசிரியர் தினகரன்
கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல்
கவிஞர் நஜ்முல் ஹுசைன்
ரஷீத் எம்.பியாஸ் (நளீமி) – கத்தார்
மொஹமட் சாலிஹீன் – சிரேஸ்ட வானிலை அதிகாரி
றியாத் ஏ மஜீத் – சிரேஸ்ட ஊடகவியலாளர்

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

**பிரதி முகாமையாளர்:**
அஸ்ரி இப்னு அமீர் – துணிந்தெழு சஞ்சிகை

**உதவி முகாமையாளர்:**
ஹப்ஸா பஹுமீர் – துணிந்தெழு சஞ்சிகை
சி. கற்பஹாசினி – துணிந்தெழு சஞ்சிகை

**நிர்வாக குழு:**
ஜபீர் எம் மஹ்ரூப் – பிரதி முகாமையாளர், ஸ்கை தமிழ்
ஆஷிகா பர்சான் – பிரதி முகாமையாளர், ஸ்கை லங்கா

**பிரதம ஆசிரியர்:**
எம்.எஸ்.எம்.ஸாகிர்

**இணையாசிரியர்கள்:**
குலசிங்கம் கிலசன் – கல்முனை
முனீரா வாஹித் – பதுளை
மஜினா உமறு லெவ்வை – மாவடிப்பள்ளி

**ஆசிரியர் குழு :**
ஜவ்சன் அஹமட் – மருதமுனை
எம்.பஹ்த் ஜுனைட் – காத்தான்குடி
நிஹாசா நிசார் – கத்தார்
கமறுன் நிஸாம் (ஷாமென்) – கண்டி
ஏ.எம். கஸ்பியா வீவி – கல்முனை
பெனாஷில் ஷிப்னா – ஏறாவூர்
நிஹானா இஷாக் – கம்பளை
மொஹமட் நிப்ராஸ் – வாழைச்சேனை

**வடிவமைப்பாளர்கள்:**
ஏ.எச். முஹம்மட் ஹாரீஸ் – அம்பாறை
எம்.எச்.எம். ஷிப்கான் – பாலமுனை

**இணையத்தளம் மற்றும் சமூக வலைதளம் பொறுப்பாளர்:**

அஸ்ரி இப்னு அமீர் – அட்டாளைச்சேனை
எம்.பஹ்த் ஜுனைட் – காத்தான்குடி
நிஹாசா நிசார் – கத்தார்
ஜவ்சன் அஹமட் – மருதமுனை
எம்.எச்.எம். ஷிப்கான் – பாலமுனை

தங்களது படைப்புகளும் எங்களது சஞ்சிகையில் இடம்பெற வேண்டும் எனின் கீழ் குறிப்பிட்ட ஈமெயில் மற்றும் வட்ஸ்அப் இலக்கத்திற்கு அனுப்பி வையுங்கள்.

+97431060249 | 0757000791 skytamil.lk@gmail.com

https://magazine.skytamilnews.com

## ஆசிரியரின் கருத்து......

# கல்விச் சீர்திருத்தம் காலத்தின் தேவை; அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

2026 ஆம் ஆண்டுக்கு நாட்டில் புதிய கல்விச் சீர்திருத்தமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு அரசாங்கம் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்நாட்களில் அது தொடர்பாக கலந்துரையாடல்கள் நாட்டில் இடம்பெற்று வருகின்றன. கடந்த வியாழக்கிழமை (24) பாராளுமன்றத்தில் இது தொடர்பாக முழுமையான விவாதமொன்று இடம்பெற்றது. கல்விச் சீர்திருத்தமொன்று பற்றி பரவலாகப் பேசப்பட்ட போதும் அது தொடர்பாக ஒரு முழுமையான நகல்வு சட்டமூலத்தை அரசாங்கம் இதுவரை சமர்ப்பிக்கவில்லை. எனினும், வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் இது தொடர்பான கருத்துக்களை அறிவதற்காகவே இந்த விவாதம் நடாத்தப்படுவதாக கல்வி அமைச்சரான பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவிக்கின்றார்.

இந்தப் பின்னணியில் கல்விச் சீர்திருத்தமொன்று அவசியம் என்று நீண்ட காலமாக நாட்டில் பல்வேறு தரப்பிலும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்தன. பாராளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை (24) இடம்பெற்ற விவாதத்தில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க கலந்துகொண்டு உரையாற்றினார். பல முக்கியமான கருத்துக்களை அவர் தெரிவித்திருந்தார்.

இன்று நாட்டில் கல்வித்திட்டத்தின் மூலம் உருவாகின்ற தலைமுறையினர் குறித்து தனக்கு திருப்திப்பட முடியாது என்று ஜனாதிபதி தனது உரையில் தெரிவித்திருந்தார்.

உலகில் முன்னேற்றகரமான சந்தைகளை அடைவதற்கு உரியதான கல்வித்திட்டம் அமைய வேண்டும் என்று கருத்து தெரிவித்த ஜனாதிபதி, வறுமையை ஒழிப்பதில் எமது கல்வித்திட்டம் முக்கிய பங்கு வகிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இன்று சிறைச்சாலைகளிலே நூற்றுக்கு எண்பது சதவீதமானவர்கள் சாதாரண கல்வியைப் பெற்றவர்கள் என்றும் குறிப்பிட்ட ஜனாதிபதி, இன்று இடம்பெறும் குற்றங்களுக்கும் அதேபோன்று போதைவஸ்துப் பயன்பாட்டிற்கும் கல்வித்துறையில் இருக்கின்ற பலவீனமும் ஒரு காரணமாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

அண்மைக் காலங்களில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பாடசாலைக் கல்வியை விட்டுச் சென்றிருக்கிறார்கள். ஆண்டு13 வரை கல்வியைக் கட்டாயப்படுத்தி, அதனைப் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். எந்தவொரு மாணவரும் பாடசாலையை விட்டு பிரிந்து செல்லாத ஒரு கல்வித்திட்டம் தேவை.

தொடராகப் பாடசாலைக்கு வராத மாணவர் பற்றி தேடிப் பார்க்க வேண்டும். அது மிக முக்கியமானது. பாடசாலை முறை பற்றியும் மீள சிந்திக்கப்பட வேண்டும். அநேக பாடசாலையில் மிகக் குறைந்த மாணவர்களும் இருக்கிறார்கள். புதிய கல்வித்திட்டத்தின் கீழ் சகல பிள்ளைகளுக்கும் சிறந்த கல்வியை வழங்க வேண்டும். முன்பு மாணவர்களுடைய ஒரு சமூக அமைப்பு இருந்தது. ஊர் கிராமங்களிலே அதிகாலை நான்கு மணிக்கு கரப்பந்தாட்டங்களை விளையாடுவார்கள். இப்போது அதிகாலை 4 மணிக்கே டியூஷன் வகுப்புக்குச் செல்லுகின்ற நிலைமை. இவர்களுடைய வாழ்க்கை என்னவென்று ஜனாதிபதி கேள்வி எழுப்பினார்.

ஆகவே, இந்த கல்விமுறையிலே நிச்சயமாக மாற்றம் ஏற்பட வேண்டும். அதற்கான பங்களிப்பு ஒரு கட்சிக்கோ ஒரு பிரிவினருக்கோ அல்ல. எல்லோரும் இணைந்து மேற்கொள்வது அவசியமாகும். அதற்காக இங்கே கட்சி பேதமின்றி சகலரும் புதியதொரு திட்டத்தை, நாட்டுக்குப் பொருத்தமான கல்வித் திட்டத்தை அடுத்த யுகத்துக்குத் தேவையான கல்வித்திட்டத்தை உருவாக்குவதற்கு பங்களிப்புச் செய்ய வேண்டும். கல்விச் சீர்திருத்தம் தொடர்பாக நாட்டிலே இடம்பெறுகின்ற கலந்துரையாடல்களில் போதியளவு சிறுபான்மை மக்கள் கலந்து கொள்ளவில்லையா? என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது.

ஆகவே, உருவாக்கப்படவுள்ள கல்வித்திட்டத்தில் சிறுபான்மை சமூகங்களை உட்படுத்தி, முழு நாட்டுக்கும் பொருத்தமான கல்வித்திட்டத்தை உருவாக்குவதில் அரசாங்கமும் கல்வி அமைச்சும் அக்கறை காட்ட வேண்டும். அதேபோன்று தமிழ், முஸ்லிம் உலக அரசியல் தலைவர்கள், கல்விமான்கள் இந்த விடயத்தில் அக்கறை காட்டுவது மிக முக்கியமானது. அடுத்த ஆண்டு முதலாம் வகுப்பு முதல் ஆறாம் ஆண்டு வரை மாற்றமான கல்வித் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

ஆகவே, எல்லா இனங்களுக்கும், எல்லா சமூகத்துக்கும் பொருத்தமான ஒரு கல்வித்திட்டத்தை உருவாக்க எல்லா தரப்பினரும் பங்களிப்புச் செய்ய வேண்டும்.

**எம்.எஸ்.எம்.ஸாகிர்**
**பிரதம ஆசிரியர்**
**துணிந்தெழு சஞ்சிகை**



# அவளும் நட்சத்திரம்

எத்தனையோ பெண்கள் இன்று சிறகுடைந்த பறவைகளாகவே இருக்கின்றனர். அவர்களிடம் ஆயிரம் திறன்கள், அதிகளவான அறிவு இருந்தும் அவர்களால் நட்சத்திரங்களாக மிளிர முடியவில்லை. அவர்களது திறன்கள் பெரிதாக பொருட்படுத்தப்படுவதுமில்லை.

பெண்கள் அதிகம் படிக்கத் தேவையில்லை, சமூகத்தில் அவர்கள் நட்சத்திரங்களாக மிளிர தேவையில்லை, வீட்டில் மட்டுமே இருந்தால் போதுமானது என்ற பழமையான சமூக உணர்வுகள் இன்னும் ஆண் சமூகத்தினர் மத்தியில் இருக்கத்தான் செய்கிறது.

இந்த உணர்வு சில பெண்களின் ஆசை, ஆர்வம், அறிவு, திறன் அனைத்தையும் மூட்டைக்கட்டி ஒரு புறம் தள்ளி விடுகிறது.

“படித்து நம்மலாலும் சாதிக்க முடியாதா? நமது திறன்களையும் இந்த சமூகம் ஏற்றுக் கொள்ளாதா?” என்ற ஏக்கம், தாகம் சில பெண்களுக்குள் காலந்தோறும் அவர்கள் உள்ளத்தில் ஊசலாடிக் கொண்டே இருக்கிறது. எத்தனையோ இப்படிப்பட்ட சிறகொடைந்த பறவைகள் இன்னும் சமூகத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள். சில பழமையான சிந்தனைப்போக்கு சமூகத்தில் ஊசலாடுவதால் பல பெண்கள் கிணற்றுத் தவளைகளாக இருந்து விடுகின்றனர். உங்களுடைய தாயாகவும், மனைவியாகவும், சகோதரிகளாகவும், மகளாகவும் இருக்கலாம். அவர்களது உணர்வுகளுக்கு மதிப்பளியுங்கள். ஆசைகளுக்கு கொஞ்சமேனும் இடமளியுங்கள். ஆசைகளை புறந்தள்ளி விடாதீர்கள். ஐந்து, பத்து நிமிடம் இவை பற்றி அவர்களுடன் கலந்துரையாடுங்கள். பழமையான அறிவீனர்களின் சிந்தனைகளை ஒரு புறம் தூக்கி எறியுங்கள்.

பெண்களும் சாதிக்க வல்லவர்கள். அவர்களையும் நட்சத்திரங்களாக மிளிர வையுங்கள். ஆண்கள் உடல் அளவால் வலிமையானவர்கள் என்றால், பெண்கள் மனதளவில் ஆண்களை விடவும் வலிமையானவர்கள். இதனால் தான் ஆசை, ஆர்வம், அறிவு, திறன் அனைத்தும் இருந்தும் பழமையான சிந்தனைக்கு அடிமைப்பட்டும் தன் மன வலிமையால் அனைத்து மன சுமைகளை தாங்கி கொண்டும் வெளியில் புன்னகைத்து கொண்டிருக்கிறார்கள்.

பழைமையான சிந்தனைகளுக்கு அடிமைப்பட்டு பட்டாம் பூச்சியாய் பறக்க வேண்டிய பெண்களை இலைமறைக் காய்கள் போன்று நசுக்கி விடாதீர்கள். அவளும் ஒரு நட்சத்திரமே. எனவே அவர்களை எங்கும் மிளிர வையுங்கள்.

**ஷமீலா அனீஸ்**
ஆயிஷா உயர்கல்வி நிலையத்தின் நூலகர்
மாவனல்லை



# முற்றுப்பெறா வினாக்கள்

கிழக்கு வானை கிழித்துக் கொண்டு சூரியன் மேலெழ சுமையா சுறுசுறுப்பாக முன்னைய தினம் தயார்படுத்தி வைத்திருந்த பைகளையெல்லாம் முன்வாசலில் கொண்டு வந்து வைத்துக் கொண்டிருந்தாள். குளியலறையில் குளித்துக் கொண்டிருந்த இர்பான் "ஏய் ... டவல கொண்டு வாங்கே..."

"ஆஹ் ... வார வார... ஏய் குய்க்கா ரெடி ஆகுங்கோ"

"ஏன்ட உடுப்பு ரெடியா?"

"ம்.. எல்லாம் அயன்பன்னிட்டன்"
என்றவள். விரைவாக தன் தவப்புதல்வனை அழகாய் ஆடைகளை அணிவித்து தயார் படுத்தினாள். எப்படியோ மணி எட்டை எட்டுவதற்குள் புகையிரத நிலையத்தை அடைந்து விட்டனர். தன் கணவரின் குடும்பத்தை சந்திக்கச் செல்லும் மகிழ்ச்சியில் இருந்தாள். ஜன்னலோர இருக்கையொன்றை தனதாக்கிக் கொண்டாள்.

அவளெதிரே ஒரு தம்பதி ஏக்கம் நிறைந்த பார்வையோடு அவள் மகனை பார்த்துக் கொண்டிருந்தாள். அவர்களின் முகங்களில் வேதனை ரேகைகள். அவளோடு உரையாடியபடியே பயணத்தை தொடர்கிறாள் சுமையா. திருமணமாகி ஐந்து வருடங்களாகியும் இன்னும் குழந்தைப் பேறில்லை என்ற வேதனைதான், சுமையாவிடம் கொட்டத்தொடங்கினாள். "எதுக்கும் கவலப்பட வேணாம். பெத்த தாயவிட படச்ச ரப்பு அன்பானவன். உங்க வேதனய அவன் அறியாமலா இருப்பான். எதுவொன்றையும் பிற்படுத்துவதும் முற்படுத்துவதும் அவன் செயல். காரண காரியமின்ட்ரி எதுவும் நடக்காது கவலப்படாதிங்க" என்று ஒரே மூச்சாய் ஆறுதல் சொல்லி முடித்தாள்.

தன்னை அறியாமலே அவளது நினைவுகள், பின்னோக்கிய நாட்களை அசைபோட்டன.

அவளுக்கு திருமணமாகி அன்றோடு இரண்டு ஆண்டுகள்.

கணவனின் குடும்பத்தில் ஒரு திருமண நிகழ்வு. நாளை திருமணம் என்றிருக்க கணவனின் ஆடைகளை மாத்திரம் அடுக்கி வைக்கிறாள் அவள்.

"சுமையா நீங்க ரெடி ஆகல்லயா ?"

"நான் வரல்ல நீங்க போங்கோ"
வெறுமையாய் பதிலளித்தாள்.

"ஏ வரல்ல?"

"நான் வரல்லயென்டா வரல்ல காரணம் கேக்காம நீங்க போங்கோ"

எவ்வளவோ வற்புறுத்தியும் அவள் பிடிவாதத்தில் மாற்றம் இல்லை. வாக்குவாதம் முத்திப்போக அது வரையில் அவள் கன்னங்களை வருடிய கை அன்று ஆத்திரத்தில் கன்னங்களை பதம் பார்த்து விட்டது. அன்று அவன் தனியாக திருமண நிகழ்விற்கு செல்ல வேண்டியதாயிற்று.

“இர்பான்... எங்கியன் அவ?”

“மைனி வரலயா?”

“நீங்க மட்டுமா வந்த சுமையா எங்கியன்?”

குடும்பத்தாரின் கேள்விக்கனைகள் அவனை கொஞ்சம் கொஞ்சமாக கிழிக்கத் துவங்கின. அதைக் கேட்டுத் தாயாரும் புலம்ப ஆரம்பித்து விட்டார்.

“நாளு மனிசர் வார எடமென்டு நல்லா தெரியும் தானே. கேக்கியவங்களுக்கு நாங்க என்ன பதில் செல்லவன். ஊட்டுக்கு வரட்டுமே நல்லா நாளு கேள்வி கேக்கியன்”

“அவவொரு பெருமக்காரி” தாயை ஒத்துப் பாடினாள் இர்பானின் தங்கை.

அவனது கோபம் படிப்படியாக உச்சம் தொட்டது. அன்று ஆரம்பித்த பிரச்சினை நாளுக்கு நாள் நீண்டு வாழ்வே நரகமாய் நகரத் தொடங்கின.

திடீரென ஒரு நாள் அவளது நெருங்கிய நண்பியொருத்தி அழைப்பு விடுத்து நண்பர்கள் ஒன்றுகூடல் நிகழ்வொன்றுக்காக அழைக்கப்பட்டாள். அங்கு சென்றாலாவது மனதுக்கு கொஞ்சம் மாறுதலாக இருக்குமே என கணவனிடம் அனுமதி கேட்க அவனோ மறுத்துவிட்டான்.

“ஒனக்கு ஏன்ட ஊட்டு ஃபங்சனுக்கு போக ஏலாட்டி வேற எங்கயும் போக தேவல்ல. இப்புடியே ஊட்டுக்குள்ளயே சும்மா இரு” வார்த்தைகள் வரம்பு மீறின.

நாள் முழுவதும் கண்ணீரில் கரைந்து போனாள். வழமை போல அன்றிரவும் தனது மனக்குமுறல்களையெல்லம் கொட்டித் தீர்த்தாள் டயரில்.



அழுதழுதது தன்னை அறியாமலே உறங்கியும் போனாள். இர்பானுக்குள்ளும் ஏதோ ஒரு குற்ற உணர்வு, தன்னால் மனைவி அளவுக்கதிகமாய் காயப்பட்டு விட்டாளோ?

கட்டிலை விட்டு மெல்ல எழுந்தான். தன் மனைவியின் டயரியை திருட்டுத்தனமாக பார்க்கிறான். அவளது அன்றைய குறிப்பு

“எல்லோரும் என்னை மலடி என்று சொல்லாமல் சொல்கிறார்கள். என் கணவன் உட்பட ஆனால் என் உயிர் நண்பி ரினோஸா மாத்திரம் தான் எனக்கு ஆறுதலாக இருக்கிறாள். அவளோடு கொஞ்ச நேரம் டைம் ஸ்பென்ட் பண்ணினால் ஆறுதலாக இருக்கும். ஆறுதல் வார்த்தைகள் பெரும் வாய்ப்புக்கூட இல்லாத ஓர் அபலை நான்” அவன் கண்கள் வேர்க்கத் துவங்கின. பக்கங்களைப் புரட்டிப் படிக்கத் துவங்கினான்.

“போகும் இடமெல்லாம் இன்னும் விசேசமொன்டுமில்லையா?” நொந்து நூலாய்ப் போகிறேன்.

இப்போதெல்லாம் யாரிடமும் கதைக்கும் போது, “இன்னும் பிள்ளை இல்லையா?” என்று கேட்டிடுவார்களோ என்கிற பயம். அதற்காகவே சிலரிடம் பேச்சுக் கொடுப்பதையே குறைத்துக் கொள்கிறேன்.

“இப்போது என் அன்புக் கணவனுக்கும் என்னைப் பிடிப்பதில்லை. பயமாய் இருக்கிறது எப்போது என்னை மலடி என்று விரட்டி ஒதுக்கி விடுவாரோ”

இர்பானின் கண்கள் குளமாகின. விம்மலோடு இன்னுமோர் பக்கத்தைப் புரட்டுகிறான்.
“சிலர் எட்வைஸ் என்ற பெயரில் மனதைக் குத்திக் கிழிக்கிறார்கள். தாங்கித்தானே ஆக வேண்டும்.”

“கடைசியாக எப்போது மகிழ்ச்சியாக இருந்தேன் என்று கூட நினைவிலில்லை. இந்த வேதனைக்கு முற்றுப்புள்ளி இல்லையா? இந்த வாழ்க்கை இப்படியே தொடருமானால் நான் உயிரோடிருப்பேனா?”

"இந்த சமூகத்தின் வேல்பாய்ச்சும் கேள்விகளிலிருந்து என்னால் தப்பிக்க முடியுமா? கடன்காரி போல் ஒழிந்து வாழ வேண்டிய நிலை எனக்கு வந்திருச்சே...."



இர்பான் தேம்பித்தேம்பி அழுகிறான். இவ்வளவு நாளாய் அவளை புரிந்து கொள்ளாமல் சண்டையிட்டதை எண்ணி வருந்தினான். அவளிடமே மன்னிப்புக் கோரினான்.

தன் மனைவி ஆழ்ந்த மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டிருப்பதை உணர்ந்தவன், அவளை எப்படியாவது மீட்டெடுக்க வேண்டும் என்பதில் முழுக்கவனம் செலுத்தினான்.

அவளை அன்பாக கவனித்துக் கொண்டான். அவளை ஒரு வைத்தியரிடம் அழைத்து சென்று ஒரு குழந்தைப் பாக்கியத்தை பெறுவதற்கு தேவையானவற்றை செய்தான்.

தன் குடும்பத்தார் மனதில் அவளைப் பற்றி இருந்த தவறான எண்ணக்கருவை வேரோடறுத்தான். தன் மனைவிக்காய் கண்ணீர் சிந்தி இறைவனிடம் மன்றாடினான். தௌபா செய்து மீண்டான்.

காலம் எப்போதும் ஒன்று போல் இருப்பதில்லை. அவனது பிரார்த்தனைகளுக்கும் பதில் கிடைத்தது. ஆம்... சுமையாவும் "தாய்" என்ற அந்தஸ்தைப் பெற்றாள்.

அவளுக்குள்ளும் படிப்படியான மாற்றங்கள் தோன்றின. அவளுக்கு எந்தக்குறையும் இருக்கக் கூடாது என்று அவனும் அதிக அக்கறை காட்டினான். இணையம் மூலமாக அவளைப் பராமரிப்பது தொடர்பான தகவல்களைத் திரட்டி நடைமுறைப்படுத்தினான். நாட்கள் மாதங்களாக அவர்கள் ஆசைப்படி அவர்களது தவப்புதல்வனை பெற்றெடுத்தாள். அவர்களது வாழ்விலும் வசந்தம் வீசத்துவங்கின.

"சுமையா அடுத்த ஸ்டேசன்ல எரங்கோனும்" இர்பானின் குரல் கேட்டு சிந்தனையில் இருந்து விடுபட்டாள்.

"ஆஹ்... அதுக்குள்ள எறங்குற இடமும் வந்துட்டா?"

"ம்..."

திருமண வாழ்வில் எந்தவொரு பிரச்சனையாக இருந்தாலும் கணவன் மனைவிக்கு இடையிலான ஒரு புரிந்துணர்வு இருந்தாலே போதும் என்பதை உணர்ந்த சுமையா மகிழ்ச்சி பொங்க மாமி வீட்டை வந்தடைந்தாள்.

அங்கிருந்த பக்கத்து வீட்டு மாமி ஒருவர் பிள்ளையோடு கொஞ்சியபடியே,
"இன்னுமே ஒத்தரா? அடுத்த நல்ல சேதி எப்போ?"

இப்போது புதிதாய் அடுத்த கேள்வி...

இந்த சமூகத்தில் கேள்விகளுக்கு முற்றுப்புள்ளியே இல்லை...

முற்றுப்பெறா வினாக்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

ஆக்கம்:
வெலிப்பன்னை ரம்ஸா

# அழகின் வரையறை தெரியாது



அவளின் விழி மட்டும் சொல்லும்
பார்வையால் என் பாதையை
மறைத்திடுவாள் என்று

கண்ணோடு கண் வைத்துக் கனியவில்லை
முகம் பார்த்து மலரவில்லை
சிறுவயதில் சிறு பழக்கம்
சிறிய சந்திப்பு
நேரில் அல்ல


கேட்டேன்
உள்ளங்கையில் உன்னை
ஊன்றித் தாங்கி கொள்வேன் என்று
உற்று நோக்க கண்களால் உளறி விட்டாள்

காலங்கள் கரையலாம்
நான் களவாடிய அவளது காதல் குயிலோசையை
யாராலும் யூகிக்க முடியாது
யாவரும் அறிந்ததே இதயம் கொள்ளை போகும்

ஆனாலும் ஆருயிர் கொடுத்தாலும்
அவளுக்கான இதயம் என்னிடம்
எப்போதும் காத்துக் கொண்டே இருக்கும்

**ஆக்கம்:**
**சாய்ந்தமருது சஜான்**

# அப்பாவின் நிழல்



வார்த்தைகள் பேசவில்லை ஆனாலும்
வாழ்க்கை முழுவதும் அவர் காதல்
ஒலித்தது
அழுகை அடங்கிய கண்களிலே
அன்பின் கண்ணீர் மட்டுமே உரையாடியது

தூக்கம் வராத இரவுகளில்
தூணாய் இருந்தது அவர் நிழல்
வளர்ச்சி நோக்கிய வழிகளில்
சாயாமல் நடந்தார்
சுவர் போல செம்மையாக நான் நிற்பதற்கு
அடித்தளமாய் நின்றவர் என் அப்பா

மௌனமே அவரது மொழியாக
சோர்வுகள் முகத்தின் புன்னகையாக
நான் பயந்த ஒவ்வொரு பாதையிலும்
நிழலாய் நடந்தவர் என் அப்பா

"நான் இருக்கிறேன் மகளே" என்ற
மென்மையான நிழலாய்
ஒவ்வொரு வீழ்ச்சிக்குப் பின்னும் நின்றவர்
என் வெற்றியின் ஒவ்வொரு தடத்திலும்
அவர் காலடிச் சத்தம் ஒலிக்கின்றது.

**ஆக்கம்:**
**ஹஸானா ஹனீபா**




அருள்மிக்க மாதமாய்..
வந்ததுவிட்ட புனித முஹர்ரமே...
அதிசய மாதம் விதித்த...
அதன் காலசூசியால் அதன் புத்தாண்டும் பூத்ததம்மா..

புத்தாண்டு பூக்கின்ற...
முதல் மாதம் முஹர்ரமாம்...
பல புதுமைகள் பொதிந்து வைத்தே செல்வமாம்....

புனித மாதம் முஹர்ரமே...
பூமி தன்னில் உன்
உதயம் கண்டதனால்...
பூலோகம் பார்த்து..
புதுமை வியக்கிறது.

மூஸாவை முன் மொழிந்த முஹர்ரமே..
போரை வெறுத்த முஹர்ரமே...
அமைதி செழித்த முஹர்ரமே..
வான் குயில் சோலை மாதமாம் புனித முஹர்ரமே...

பூங்காற்றும் புது மணம் வீசும் முஹர்ரம் மாதமே..

தியாகத்தின் விலை மதிப்பாய்...
வந்து விட்ட புனித முஹர்ரமே...
தியாகத்தின் நேர்வழியாய்..
தீனோரின் திருப்புத்தாண்டாய்..

இனிய முஹர்ரமே வருக.
ஃபிர்அவ்னின் கொடுங்கோல்
ஆட்சியினை அழித்தது..
உன் வருகையின் சின்னமே..

புனித மாதம் முஹர்ரமே...
முத்தான முஹர்ரமே வருக..
முழுமையான அருளைத் தருக..

செம்மை முஹர்ரமே வருக..
செழுமையான வாழ்வினைத்தருக...
இனிய முஹர்ரம் மாதத்தின் சிறப்புகள்....
அனுதினமும் எம் வாழ்வில் நிலைக்கட்டும்...

ஏ.சபானா
அட்டாளைச்சேனை

# மீண்டெழு பலஸ்தீன்



மீண்டும் மீண்டுமாய் தாக்குதல்
மீள முடியாமல் பல இழப்புகள்
ஏன் இந்த நிலைமை
தாங்குதில்லை
நமது நெஞ்சமே

இஸ்ரேலியர்களின்
இதயமும்
இரும்பைப் போலத்தான்
என எண்ணவும்
தோன்றுதே

வரண்ட இதயத்தால்
வன்மத்தில் சாதித்த
சாதனை எதுவுமில்லை
பரிதவித்து வந்த போது
பாவம் பார்த்து
நேசக்கரம் கொடுத்தது
பலஸ்தீனர்களின் குற்றமா?

பாவம் பார்த்த மக்களையே
பலியாக்கும் இஸ்ரவேலர்கள்
எவ்விதக் கூட்டமோ?

ஈமானின் ஈரலிப்புக்குள்
இதயம் இருக்கும் வரை
பலஸ்தீனர்களின்
இன்னல்களுக்கும்
இறப்புகளுக்கும்
இதுவெல்லாம்
இறைவனிடத்தில்
வெற்றிதான்

அத்தனை துயரத்திலும்
விட்டுக் கொடுக்கா
ஈமானியம் பேசுகின்றது வலிமையான
உள்ளங்களின்
உறுதியினை

முடிவுறா சமரிலும்
மூர்ச்சையாகாத
பலஸ்தீனம்
மீண்டெழும் காலம்
தூரமில்லை.
மீண்டெழு பலஸ்தீனமே
காத்திருக்கின்றோம்
அந்நாளுக்காய்.

**முபீதா அமீன்**
**அக்கரைப்பற்று**

# ஆளுமை அறிமுகம்

# சித்தி சபீனா வைத்துள்ளாஹ்



**மகிழ்ச்சியான சந்தர்ப்பங்களின் போது மன நிறைவு காணும் பெண் பல்வேறு துயரங்கள், சுமைகள், ஏமாற்றங்கள் போன்றவற்றை சந்திக்கும் போதும் மனமுடைந்து குற்றம் குறைகள் கூறிக் கொண்டிருக்காமல் அவற்றை நிதானமாக அணுகும் முறையையும் கைக்கொள்ள வேண்டும்.**

திருகோணமலை மாவட்டத்தில், இயற்கை எழில் கொஞ்சும் கிண்ணியா என்னும் பிரதேசத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சித்தி சபீனா வைத்துள்ளாஹ் என்பவர் "கிண்ணியா சபீனா" என்ற பெயரில் இலக்கியச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றார்.

இவர் பக்கிரான் ஹாஜியார் அப்துல்லாஹ் மற்றும் சம்சுதீன் மஸியா தம்பதியினருக்குப் பிறந்தவராவார். இவருடன் கூடப் பிறந்த சகோதர, சகோதரிகள் ஒன்பது பேராகும். அதில் எட்டுப் பேர் அரச ஊழியர்களாவர். மூத்தவர் சட்டத்தரணி, இரண்டு அதிபர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பணி புரிகின்றனர். பொருளாதாரக் கஷ்டம் [illegible] [illegible], [illegible] [illegible] வாசிப்பை நேசிப்பவராக காணப்பட்டார். இவரது இல்லற வாழ்வானது சிறப்பாக அமைய, இவருக்கு மூன்று பெண் பிள்ளைகள் கிடைத்தார்கள். மூவரும், சுகாதாரத் துறையில் பணிபுரிந்து வருகின்றார்கள்.

இலக்கியத் துறையில் தனக்கென ஓர் இடத்தை உருவாக்கிக் கொண்டுள்ள கிண்ணியா சபீனா அவர்களுடனான நேர்காணல் இதோ!

*1) நீங்கள் கல்வி கற்ற பாடசாலைகள் மற்றும் கற்கைகள் பற்றி?*

நான் கல்வி கற்ற பாடசாலைகள் எனும் போது, தி/கிண்ணியா இஹ்ஸானியா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியும், பின்னர், கிண்ணியா மகளிர் தேசிய பாடசாலையில் உயர்தரம் வரையும் கற்றேன். கிண்ணியாவில் 1981ல் உயர்தரம் சித்தியடைந்து, முதன் முதல்



பல்கலைக் கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட பெண் மாணவியாக இருந்தேன். என்றாலும் பட்டப்படிப்பை முடிக்கும் பாக்கியம் அன்றைய வறுமையால், என்னை விட்டு நழுவியது.

உண்மையில் எல்லோரும் கூறுவது போல, நானும் இளமைக் காலத்தில் இருந்தே, வாசிப்பை நேசிப்பவராக இருந்தேன். அக்காலத்தில் இடம்பெற்ற பேச்சு, கவிதை, சிறுகதை மற்றும் கட்டுரை எனப் பல போட்டிகளில் பங்குபற்றி வெற்றிகள் பெற்றுள்ளேன்.

1982லே போட்டிப் பரீட்சை மூலம் ஆசிரியர் பணிக்குத் தெரிவு செய்யப்பட்டேன். ஆசிரியராக, உளவளத் துணையாளராக, உதவி அதிபராக எனப் பன்முகம் கொண்டு கல்விப் பணி புரிந்துள்ளேன்.

**2) ஆசிரியர் துறையில் நீங்கள் மேற்கொண்ட பணிகள் எவை?**

உண்மையில் ஆசிரியப் பணி என்பது அறப்பணிதான். வகுப்பறையில் நுழைந்து, முகமலர்ச்சியுடன், அந்தப் பிஞ்சு உள்ளங்களுடன் அன்பாக உரையாடி, கற்பிக்க வந்த பாடத்தைத் தொடங்கும் போது, என் மனதிலும் புத்துணர்வு பிறக்கும். அப்புத்துணர்ச்சியுடன் மாணவர்களுடன் உறவாடிப் பணி புரிவதும் மகிழ்ச்சியான விடயம் தான்.

நான் நாற்பத்தொரு வருடங்களுக்கு மேலாகக் கல்விப் பணி புரிந்துள்ளேன். ஆசிரியராக, உளவளத் துணையாளராக, உதவி அதிபராக எனப் பல வகிபாகங்களை கொண்டிருந்தேன். உண்மையில் ஆத்மார்த்தமான மகிழ்வோடு செய்த என் பணிக்கு இன்னும் இரண்டு வருடங்களாவது நீடிப்புக் கிடைக்காதா என்று கூட எண்ணி ஏங்கினேன்.

பாடசாலையின் புறக்கிருத்தியப் பணிகளான மீலாத் போட்டிகள், தமிழ்த் தினப்போட்டிகள், வலைப்பந்தாட்டப் போட்டி மற்றும் பொருட்காட்சிக்கான ஏற்பாடுகள் போன்ற விடயங்களில் அர்ப்பணிப்புடன் ஆர்வம் கொண்டு, மாணவர்களை ஈடுபடுத்தியுள்ளேன்.

2010ம் ஆண்டு திருகோணமலை சாஹிரா கல்லூரியில் கற்பிக்கும் காலத்தில் ஆண் மாணவர்கள் பத்துப் பேரை, நாடகப் போட்டியில் பங்கு பற்றச் செய்தேன். தேசிய மட்டத்தில் எமது பாடசாலையிற்கு அந்நாடகத்துக்கு இரண்டாம் இடம் கிடைத்தது.



அது மட்டுமல்ல, கிண்ணியா அல்/அதான் மகா வித்தியாலயத்தில், கஸீதாப் போட்டியில், தேசிய மட்ட வெற்றிகளைப் பெற்றுக் கொள்ள ஆற்றுப்படுத்தியுள்ளேன். மேலும் கவிதைப் போட்டிகள், பக்கீர்பைத், வில்லுப்பாட்டு, நாட்டார் பாடல், பேச்சுப்போட்டிகள், எழுத்தாக்கப் போட்டிகள் என மாணவர்களை, ஊக்குவித்து வெற்றிப் படிகளை எட்டித் தொட வைத்துள்ளேன்.

இவ்வாறு இலக்கிய நயத்துடன் என்னோடு இணைந்த என் அன்பு மாணவச் செல்வங்களை

“கலைச்சுடர் இலக்கிய மன்றம்” எனும், கலைமன்றத்தில், ஒன்றிணைத்து கவியரங்குகள் மற்றும் போட்டி நிகழ்ச்சிகள் போன்றவற்றை தற்போது நடாத்தி வருகின்றேன்.

**3) இலக்கிய துறையில் நீங்கள் மேற்கொண்ட பணிகள் எவை?**

புதுக்கவிதைகள் எழுதிக் கொண்டிருக்கும் எனக்கு, மரபுக் கவிதைகளின்பால் ஆனந்தமான இரசனையும், ஈர்ப்பும் மிகுந்த ஈடுபாடும் உண்டு. எனது கலை மன்றத்தில் உள்ள அங்கத்தவர்களுக்கு மரபுக் கவிதைகள் பற்றி அறிமுகம் செய்து பயிற்சி கொடுத்து வருகின்றேன்.


அத்தோடு, பொதுவான இலக்கியப் போட்டிகளிலும் பங்கு பற்ற வழிகாட்டி வருகின்றேன். பிரியாவிடை வைபவங்களில் வழங்கி வைப்பதற்கு வாழ்த்து பாக்கள் புனைந்து கொடுத்தல், முக்கியமான நிகழ்வுகளின் போது பாடுவதற்கான பாடல்கள் எழுதிக் கொடுத்தல் போன்ற இலக்கியச் செயற்பாடுகள் என் உள்ளத்தில் ஆனந்தம் ஊற்றெடுக்கச் செய்கின்றன. மேலும், முகநூல் குழுமங்கள் பலவற்றில் நடுவராகவும் பணியாற்றி வருகின்றேன். சில குழுமங்களில் நிர்வாக உறுப்பினராகவும் கடமைபுரிகின்றேன்.

**4) நீங்கள் வெளியிட்ட நூல்கள் எவை?**

இதுவரையிலும் நான் வண்ணக் கனவுகள் (கவிதைத் தொகுப்பு), செல்ல சிட்டுக்கள் (சிறுவர் பாடல்), மின்னிடும் பொன்மணிகள் (சிறுவர் பாடல்), புதியதோர் இலக்கினை நோக்கி (கட்டுரைத் தொகுப்பு) எனும் நான்கு நூல்கள் இலக்கிய உலகுக்குப் படைத்தளித்துள்ளேன்.


நெதர்லாந்து சூரியத் தமிழ் தொலைக்காட்சி நிறுவனத்தின் மரபுக்கவிதை பயிற்சி வகுப்பில் மரபு கற்றுக் கொண்டிருக்கும் நான் “சிற்றிலக்கிய நூல்” ஒன்றினையும் படைத்துள்ளேன்.

இன்னும் “வெண்பா நானூறு”, “விருத்தப்










பூக்கள்” எனும் மரபு நூலுக்கான ஆக்கங்களும் முப்பதுக்கும் மேல் சிறுகதைகளும் உள்ளன. தமிழன் பத்திரிகையிலே, எனது ஆக்கமான “புலரும் பொழுது” எனும் தொடர்கதை முப்பது தொடர்களைத் தாண்டி வெளிவந்து கொண்டிருக்கின்றது. விரைவில் இவற்றை நூலுருவாக்கம் செய்ய வாய்ப்புக்கள் கிடைக்கும் என நினைக்கிறேன்.

**5) நீங்கள் இலக்கியத்துறையில் பெற்ற விருதுகள் எவை?**

எனக்கு “கலாபூஷணம்” மற்றும் “இலக்கிய வித்தகர்” என இரண்டு அரச விருதுகளைப் பெற்றுப் பெருமகிழ்வு கொண்டேன்.

கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் அமைச்சினால் நடாத்தப்பட்ட மரபுக் கவிதைப் போட்டியில் முதலிடம் பெற்ற எனக்கு “மாகாண மட்ட மரபுக் கவிதைக்கான விருது” கிடைத்தது. இதுவும் ஓர் அரச விருதுதான். மேலும், ஸ்கை தமிழ் ஊடகம் வழங்கிய






"இலக்கிய ஆளுமை விருது", நெதர்லாந்து சூரியத் தமிழ் தொலைக்காட்சி நிறுவனமானது "விருத்தகவி வேந்தர் விருது" மற்றும் "விருத்தப்பாமணி விருது" அன்பின் பாதை எண்ணம் போல் வாழ்க்கைக் குழுமமானது "மாதர் மணிச்சுடர் விருது", அமெரிக்க முத்தமிழ் பேரவையானது "முத்தமிழ்ச்சுடர் விருது", உலகத் தமிழ் கவிஞர்கள் சங்கமானது "சந்தப்பாமணி விருது", அறம் வழி அறக்கட்டளை நிறுவனமானது "கவியரசர் பட்டம்", தமிழ்நாடு அகழ் கலை இலக்கிய அறக்கட்டளை மன்றம் நடாத்திய சர்வதேச மட்டத்தில் வெற்றி பெற்றமைக்கான, "சொல் ஆர்வலர் விருது", புதுச்சேரி தமிழ்ச் சான்றோர் பேரவையானது "கலைஞர் கவிச்சுடர் விருது", இமைக்கா விழிகள் கவிக்குழுமமானது "மரபு மணி" என்றும் கலை ராவணா விருது, பாரதி கண்ட புதுமைப்பெண் விருது, மரபொளிர் விருது, கடற்பறவைகள் குழுமம் நாடளாவிய ரீதியில் நடத்திய கவிதைப் போட்டியில் வெற்றி பெற்றமைக்காக விருதும் பரிசும் என இலக்கியத்துறையில் ஏராளமான விருதுகள் கிடைத்துள்ளன.

**6) நீங்கள் இலக்கியத்துறையில் பயணிக்கும் போது எதிர்கொண்ட சவால்கள் மற்றும் அதனை எவ்வாறு தீர்த்துக் கொண்டீர்?**

உண்மையில் இலக்கை நோக்கிய பயணத்தில் வீறுநடை போடும் ஒவ்வொருவருக்கும், பல தடைகளும் மனதைக் காயப்படுத்தக்கூடிய சவால்களும் முட்டி மோதிக் கொண்டு தான் இருக்கும். போட்டியும் பொறாமைக் குணமும் கொண்டோர் பல்வேறு வழிகளிலும் தாக்குதல் நடத்திக்கொண்டு தான் இருப்பார்கள். நமது இலட்சியப் பயணத்தைப் பல்வேறு வழிகளிலும் தடுத்துக் கொண்டும் இருப்பார்கள்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் நம்மிடம் ஏதும் குறைபாடுகள் பிழைகள் இருக்கின்றனவா என நாம் சுய பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். எம்மில் தவறுகள் இருப்பின் திருத்திக் கொள்ளல் வேண்டும். எந்தத் தவறுகளும் பிழைகள் இல்லாத பட்சத்தில் கூட பல்வேறு விமர்சனங்களும் வீண் குற்றச்சாட்டுக்களும் எழத்தான் செய்யும். அவற்றை எல்லாம் பொருட்படுத்தாது நமது

இயலுமைமைக்கேற்றதான பயணத்தில் நாம் கவனம் செலுத்துதல் வேண்டும். எனக்கேற்பட்ட இவ்வாறான தருணங்களை நிதானமாகக் கடந்து வந்தேன்.

என்னை யாரும் மட்டம் தட்டினால் அவர்கள் சுட்டிக்காட்டும் அந்த துறையில் நான் இறைவனின் உதவியுடன் வென்று காட்ட முயற்சிப்பேன்.




### 7) இலக்கியத்துறை தவிர்ந்த வேறு ஏதாவது துறைகளில் நீங்கள் பயணிக்கிறீர்களா?

கல்வித்துறை மற்றும் இலக்கியத்துறை தவிர பல சமூகப் பணிகளிலும் நான் ஈடுபட்டு வருகின்றேன். மறுமை நோக்கிய எனது பயணத்தில் நான் செய்து வரும் சமூகப் பணிகள் இரகசியமாக இருக்க வேண்டும் என்று நான் கருதுகின்றேன். சில சமூகப் பணிகள், உதவிகள் என்பவற்றை இறை திருப்தியை நாடியே செய்து வருகின்றேன் என்பதனால் வெளிப்படையாகக் குறிப்பிடுவதைத் தவிர்த்துக் கொள்கிறேன்.

### 8) உங்களது இலக்கு யாது?

எல்லோரும் போலவே நான் இம்மையுடன் மறுமை வெற்றியையும்தான் எண்ணத்தில் வைத்திருக்கிறேன். எனது பயணத்தை இறைவன் எதுவரை வைத்திருக்கிறானோ அதுவரையும் என் பயணம் சிறப்பாக அமைய வேண்டும் என்பதே எனது இலக்காகும். உண்மையில் நாம் ஒவ்வொருவரும் மனச்சாட்சிக்கு விரோதம் இல்லாத வகையிலே வெற்றியையோ தோல்வியையோ எதையும் பெரிதாக அலட்டிக் கொள்ளாமல் வாழ்ந்திடவே ஆசைப்பட வேண்டும்.

மற்றவர்களுக்கு நல்லது செய்யக் கிடைப்பது ஒரு பெரிய வரமாகும். அது எல்லோருக்கும் கிடைப்பதில்லை. நல்லது செய்யாவிட்டாலும் தீங்காவது செய்யாதிருத்தல் வேண்டும்.

### 9) நீங்கள் சமூகத்துக்குக் கூற எத்தனிக்கும் கருத்து யாது?

உண்மையில் பெண் என்பவள் சுமை தாங்கும் கல் என்றுதான் நான் கூறுவேன். மகளாக, மனைவியாக, மருமகளாக, தாயாக என பல வேடம் கொண்டு வாழும் பொழுதிலே பல்வேறு சந்தோசங்களைக் கண்டுகொண்டு தான் இருக்கின்றோம்.

அதேவேளை பல்வேறு சுமைகளையும் ஏற்றுக்கொள்ளும் பல சூழ்நிலைகளும் வரத்தான் செய்யும். மகிழ்ச்சியான சந்தர்ப்பங்களின் போது மன நிறைவு காணும் பெண் பல்வேறு துயரங்கள், சுமைகள், ஏமாற்றங்கள் போன்றவற்றை சந்திக்கும் போதும் மனமுடைந்து குற்றம் குறைகள் கூறிக் கொண்டிருக்காமல் அவற்றை நிதானமாக அணுகும் முறையையும் கைக்கொள்ள வேண்டும். இந்த நிலைமைகளின் போது, பெண் சாதுரியமாக முடிவெடுத்துக் காய்நகர்த்துதல் வேண்டும்.





பொதுவாக, ஆண்களைக் குற்றம் கூறிப் பெண்ணியம் பேசுதல் என்பது எனக்குப் பிடிக்காது.

உண்மையில் எந்த ஓர் ஆத்மாவையும் அது தாங்கும் சக்திக்கு மேலதிகமாக இறைவன் சிரமப்படுத்துவதில்லை. அந்த வகையிலே ஒரு பெண்ணானவள், ஆணைக் குறை கூறிக் கொண்டிருப்பதை விடுத்து, தன் இயலுமைக்கேற்றவாறு தனது பொறுப்புக்களைச் சுமந்து காரிய மாற்றும் போது இறைவனின் உதவியோடு பல வெற்றிகளைத் தனதாக்கிக் கொள்ள முடியும்.

அந்த வகையில், நமது இயலுமைக்கேற்ற வகையிலே பொறுமையாகச் செயல்படுதல் வேண்டும்.

அவ்வாறு சாதித்த அனுபவமும் எனக்கு உண்டு. இறைவனின் ஏவல் விலக்கல்களைக் கடைப்பிடித்து நடக்கும்போது பல விடயங்கள் தோல்வி போல் தோன்றினாலும் கடைசியில் இறைவனின் உதவியோடு வெற்றிகள் கிடைக்கும்.

இந்த விடயங்களை முஸ்லிம் பெண்களாகிய நாம் இலக்கியத்தின் ஊடாகவும் சமூகத்துக்கு எத்தி வைக்கலாம். நல்ல செய்திகளையும் நல்ல மனப்பாங்குகளையும் கொடுக்கலாம் என்பது எனது நம்பிக்கையாகும்.

**10) எமது ஊடகமான ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகை பற்றி கூறுங்களேன்?**

உண்மையில் ஸ்கை தமிழ் ஊடகம் மற்றும் துணிந்தெழு சஞ்சிகையின் நீண்டகால ரசிகை நான். வாசகி என்று கூறுவதை விட ரசிகை என்று கூறுவதில் எனக்குப் பெருமகிழ்ச்சி. ஏனெனில், முந்திக் கொண்டு செய்திகளை எமக்குத் தருவதில் ஸ்கை தமிழ் ஊடகம் வெற்றி கண்டுள்ளது. மேலும் அது வெளிநாடுகளிலும் கூட பல சாதனைகளையும் புரிந்து கொண்டு வருகின்றது. இந்த ஊடகமானது, இன்னுமின்னும் மேதினியில் மாபெரிய சாதனைகள் புரிந்திட என் மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்.

அதேபோல, துணிந்தெழு சஞ்சிகையும் பன்முகம் தாங்கி எழுத்தாளர்களின் ஆற்றலை வளர்ப்பதுடன் வாசிப்புப் பழக்கத்தையும் நேசிக்கத் தூண்டக் கூடிய சக்தியாக விளங்குகின்றது.

மேலும் ஸ்கை தமிழ் ஊடகமும் துணிந்தெழு சஞ்சிகையும் சேர்ந்து பல்வேறு துறைகளிலும் சாதனை புரிந்தவர்களுக்கு 2024 இல் விருது வழங்கி கௌரவித்திருந்தது. அந்த விருது விழாவிலே என்னையும் இந்நிறுவனம் கௌரவித்திருந்தது. எனக்கு இலக்கிய ஆளுமை விருதளித்திருந்தமையை இவ்விடத்திலே கூறிக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

மேலும் ஸ்கை தமிழ் ஊடகம் மற்றும் துணிந்தெழு சஞ்சிகை எதிர்காலத்திலே பல்வேறு சாதனைகள் புரிந்து வெற்றி நடை போட என் மனமார்ந்த நல்வாழ்த்துக்களை மீண்டும் ஒருமுறை கூறிக் கொள்கிறேன்.



*செவ்வி கண்டவர்:*
**ஹப்ஸா பஹ்ஹமீர்**
*உதவி முகாமையாளர்*
*துணிந்தெழு சஞ்சிகை*

# நம்மை நாமே மீட்கலாம்.....!



எழுந்திடு துணிந்திடு எதிலுமே தெளிந்திடு
விழுந்திடும் விதைகளும் விருட்சமாய்
மாறுமே!

பொழுதுகள் புலர்வதும் கணப் பொழுதிலே
தோன்றிடா நழுவிடும் வாய்ப்பினை
நழுவிடாமல் பிடித்திடு !

தகர்த்திடு பொறாமைகள் தவிர்த்திடு
சோம்பலை பகர்ந்திடு அறிவினைப்
பகிர்ந்திடல் மேன்மையே

முகமலர் துதிகளில் முரண்களும் புதைந்திடும்
அகமலர் சிறந்திடில் அனைத்துமே சிறப்புறும்

புறத்திடை நடப்பதைப் புறந்தள்ளிப் புறப்படு
அறத்தினை மனத்திலே அச்சாரமிட்டிடு
குறள்களின் பொருள்களைக் குன்றிடா
நெறிகளை முரணிலா வழிகளில்
முறையாகப் பயின்றிட

சரியெது பிழையெது சரித்திரத் தொனியெது
புரிந்திடும் பலர்ந்திடும் புதுமைகள்
நிறைந்திடும் எரிந்திடும் தீயதை
எடுத்திடு தீபமாய் மரித்திடும் வேளையும்
மங்கிடாப் புகழுடன்

நிலைத்திட நிறைந்திட நிஜத்தினை
மீட்டிட கலைத்திட வழியின்றிக்
கனவினை வளர்த்திட
வலைகளைக் களைந்து
வளைவுகள் தெரிந்து
நம்மை நாமே மீட்கலாம்
வா தோழா.....!

திருமதி பிரிந்தா புஷ்பாகரன்
களுவாஞ்சிகுடி, மட்டக்களப்பு

# தடம் மாறிய பயணம்



இதுதான் சரியான பாதையென
பூஞ்சோலைக்குள் புகுந்தது
சிட்டுக்குருவி

அந்தப் பூங்கா வனமும் மலர்களும்
எப்போதும் போலவே எல்லோர்க்கும்
போலவே சுவையையும் சுகந்தத்தையும்
தருமெனவே எண்ணமிட்டு
வட்டமிட்டதுவே

ஆனாலும் ஒவ்வொரு தடவையும்
தேன் துளிகளென எண்ணியெண்ணி
உறிஞ்சுவதும் சுகந்தமென
எண்ணியெண்ணி சுகிப்பதுவும்
வெறும் விஷ வாடைகளும் நச்சுப்
பதார்த்தங்களுமே

சுற்றிக் களைத்து சோர்வுற்ற போது
இறக்கைகளும் இற்று வீழ்ந்தன
இனிமேலும் எழுந்து பறக்காத படி...
அதன் பயணம் தடம் மாறியதா? அல்லது
விதியதனை வீழ்த்தியதா? சொல்!!!

மணிக்கூ கவி
நஸீரா எஸ் ஆப்தீன்
ஏறாவூர்

## இளம் கலைஞர் அறிமுகம்

# ஈழத்திலிருந்து சரிகமபவில் கலக்கி வரும் இளங்கலைஞர் சபேசன்



செந்நெல் மணிகள் வரவேற்கும் அம்பாறை மாவட்டத்தின் இயற்கை வளங்கள் நிறைந்த திருக்கோயில் விநாயகபுரம் கிராமத்தில் சுகிர்தராஜா ஜெயந்தி தம்பதிகளின் இரண்டாவது மகனாக பிறந்தவர்தான் சபேசன்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை திகோ/விநாயகபுரம் மகா வித்தியாலயத்திலும், உயர் கல்வியை திகோ/மெதடிஸ்தமிஷன் தமிழ் மகா வித்தியாலயத்திலும் கற்று, கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தில் நுண்கலைமாணி பட்டத்தையும் கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்னர் பெற்றுக் கொண்டார்.

சிறுவயதிலிருந்தே தந்தையின் பாடல்களை கேட்டு இசை மீது ஆர்வம் கொண்ட சபேசன், ஆறாம் தரத்திலிருந்து கர்நாடக இசையை முறைப்படி கற்க ஆரம்பித்தார். ஆசிரியர்களான பரமேஸ்வரி, மோகனா, பிரதீபன் ஆகியோரிடம் கற்றுக் கொண்ட இவர், பாடசாலை காலத்தில் தமிழ் மொழித் தினம், பண்ணிசை போட்டிகள் ஆகியவற்றில் கலந்து கொண்டு முதலிடத்தையும் பெற்றதோடு, வட இலங்கை சங்கீத சபை பரீட்சையில் சிறப்பு சித்தியும் பெற்றார்.

இசைக் காதலை கைவிடாத இவர் படிப்படியாக தன்னை வளர்த்துக் கொண்டு, 2013 இல் சக்தி தொலைக்காட்சியின் சக்தி சூப்பர் ஸ்டார் பாடல் போட்டியில் பங்குபற்றி இரண்டாம் இடத்தை பெற்றார். அதேபோல 2019 இல் 41வது தேசிய இளைஞர் விருது போட்டியில் இளம் பாடகர் பிரிவில் சிறந்த பாடகருக்கான தேசிய விருதையும் தன்வசமாக்கினார். 2020 இல் பேராதனை பல்கலைக்கழக தமிழ் சங்கம் நடாத்திய பாடகர் போட்டியிலும் இரண்டாம் இடத்தை பெற்றுக் கொண்டார். கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் 2022 இல் கலைஞர் சுவதம் விருது சபேசனுக்கு வழங்கி வைக்கப்பட்டது. அதேபோல இந்த ஆண்டுக்கான விருதுகளில் இசைத்துறையின் ஆற்றுகைக் கலைக்காக இளங்கலைஞராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பல விருதுகளுக்கு சொந்தக்காரரான சபேசனின் குரலில் தம்பிலுவில் கண்ணகி அம்மன் ஆலயம், விநாயகபுரம் சிவன் ஆலயம், அம்பிளாந்துறை கண்ணகி அம்மன் ஆலயம், மண்டபத்தடி பிள்ளையார் ஆலயம், திருக்கோயில் பிள்ளையார் ஆலயம் ஆகியவற்றுக்கான பக்தி பாடல்கள் இன்றும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. இதைவிட

சீரடிசாயி பாடல், திருவெம்பாவை பாடல்கள் என ஈழத்தின் பல ஆலயங்களுக்கான பாடல்களை இவர் பாடியுள்ளார். கிறிஸ்தவ பாடல்களாக ஒருவரே நீர்..., ராஜரீகம் பண்ணும் தேவன்..., பரலோகத்தின் உள்ளே..., என்னை அழைத்தவர் நீரல்லவா..., உன்னாலே நானே... என இன்னும் பல பாடல்களையும் பாடியுள்ளார். பல கஷ்டங்களையும் தடைகளையும் தாண்டி இசைக்காக ஓடிக் கொண்டிருந்த இவருக்கு ஈழத்து சினிமாவிலும் சில வாய்ப்புகள் கிடைத்தது. வேட்டையன் திரைப்படத்தில் "பனிக்காத்து வீசயில..", "உயிர் காதலி..", "உன்னோடு நானும் சேர..", "ஒரு வரி கவிதை நீ..", "நீ என் உயிர் உறவு..", "புது வெளிச்சப் பூவாய்.." போன்ற பாடல்களை பாடினார்.



பாடகர் சபேசன் ஒரு சமூக பணியாளராக, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக கிழக்கு பல்கலைக்கழகத்தில் முன்னின்று செயற்பட்டார். கவி இசை சங்கமம், இசை கருத்தரங்குகள் என்பவற்றிலும் முழுமூச்சாக செயற்பட்டவர், இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் நடாத்திய இலங்கையில் உருவான பழைய பாடல்கள் பாடும் நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டார்.

சபேசன் சிறுவயதிலிருந்து தனது தந்தையாரின் இசைக்குழுவான ஜெயாலயா



இசைக்குழுவில் தனது மேடைப்பாடல்களை பாட ஆரம்பித்தார். கல்வியோடு இசையையும் கைவிடாது அர்ப்பணிப்பாக செயற்பட்டதன் விளைவாக பல நிராகரிப்புக்கள், ஏளனங்களுக்கு மத்தியிலும் ஈழத்தின் புகழ் பூத்த பல இசைக்குழுக்களோடு பாடகராக பல மேடைகளில் வலம் வந்தார். அவரது பாடும் திறமையை ஊறறியச் செய்த பெருமை புதிய ஸ்வரம், சுருதீஸ்வரம், சப்தஸ்வரம், ஆரோகனா, அக்னி, ஸ்ருதீலயா, சூர்யாஸ், தீபம்ஸ், அனீஸ்வரா போன்ற இன்னும் பல இசைக்குழுக்களுக்கும் உண்டு. இசை மேடைகளில் பாடும் போது இந்திய திரையிசை பின்னணி பாடகர்களான உன்னி கிருஷ்ணன், பிரசன்னா, விஜய் தொலைக்காட்சி சூப்பர் சிங்கர் பாடகர்கள் மற்றும் ஜீ தமிழ் சரிகமபா பாடகர்கள் ஆகியோரோடு இணைந்து பாடி பாராட்டுக்களையும் பெற்றுள்ளார்.

வசந்தம் தொலைக்காட்சி மற்றும் சக்தி தொலைக்காட்சியின் பல நிகழ்ச்சிகளில் இவரது குரல் ஒலித்த போதும் இவருக்கான அடையாளம் பிராகாசமாக தெரியவில்லை. சிறுவட்டத்துக்குள்ளே தன் இசைப் பயணம்

குறுகிவிடக் கூடாது என்பதில் திடமான நம்பிக்கை கொண்டவராக ஜீ தமிழின் சரிகமப சீசன் 4 இல் நுழைய முயன்றும் தோற்றார். அதனால் சிலரது வசை பாடல்களும் நகைப்புக்களும் இவரது மனதை புண்படுத்திய போதும் முயற்சியும் பயிற்சியும் குறைந்ததாக இல்லை. சீசன் நான்கில் விட்ட இடத்தை சீசன் ஐந்தில் பற்றிக் கொண்டார். ஆர்ப்பாட்டமின்றி பெற்றோருக்கும் தெரியாமல் ஈழதேசத்திலிருந்து தமிழகம் நோக்கி இசைக்காக பயணித்தவர், தனிமைப் பயணத்தில் வெற்றியும் கண்டார். “காதல் வந்தால் சொல்லியனுப்பு..” என ஆரம்பித்த குரல் நீ வெற்றியாளன்தானென நடுவர்களை சொல்ல வைத்தது. வலிகளை புதைத்த நெஞ்சம் வெற்றி கண்டு மேடையில் துவண்டதையும் சிலர் விமர்சிக்காமலில்லை.

அடுத்தடுத்த சுற்றுக்களிலும் தன் இன்னிசை குரலால் நடுவர்களையும் இசை ரசிகர்களையும் கவர்ந்தார். பழைய பாடல்கள் சுற்றிலும் தன்னை யாரென நிரூபித்தவர், ஒவ்வொரு மேடையிலும் தன்னை பட்டை தீட்டக் கற்றுக் கொள்கிறார். தாயகத்தில் பல மேடைகளில் ஒலித்த குரல்தான் என்ற போதும் சபேசன் என்ற பெயரை உலகறியச் செய்த பெருமை சரிகமப மேடைக்குரியதே.











பணிவும் தன்னடக்கமும் கொண்ட பாடகர் சபேசனுக்கு இலங்கை அரசாங்கத்தின் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் இளங்கலைஞர் விருது காத்திருக்கையில் தமிழகத்தின் இசை மேடையில் தன் திறமையால் பிரகாசித்து வெற்றிவாகை சூடுவதோடு அவரது கனவுகள் அனைத்தும் கைகூட துணிந்தெழு சஞ்சிகை சார்பாகவும் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.




குலசிங்கம் கிலசன்
இணையாசிரியர்
துணிந்தெழு சஞ்சிகை

துணிந்தெழு
மாதந்தோறும் | இதழ் - 41 | ஜூலை 2025
Thuninthelu Magazine

# எனது விழிகள்

## கருப்பொருள் : உணவுகள்

இம்மாத சிறந்த புகைப்படம்


அல்மஸ் அம்ஸா - பேருவளை


எஸ்.எப்.சிம்றா - கற்பிட்டி


பாத்திமா சாரா - அக்குறணை


சசிகலா சண்முகம் - வவுனியா


எம்.சி. றிஹானாஹ் - சாய்ந்தமருது


முஹம்மட் சப்ரின் - அக்குறணை


எம்.எச்.எம்.சிப்கான் - பாலமுனை


நிஸ்பா நஸார் - கன்னத்தோட்டை



எம்.ஆர். அஹ்சின் நுஹா- கலேவல


எஸ்.எச்.எப்.சஹானா -சில்மியாபுர


யாஸீர் அலீம் - காலி


எம்.எச். பானு - அம்பாறை

# பேசும் பேனாக்கள்



## இன்னும் நகரும் துணிந்தெழு

எத்தனை சஞ்சிகைகள் வெளிவருகின்றன என்பது இங்கு கவனிப்பு கிடையாது. ஆனால் எத்தனை பேர் பயன் பெற்றார்கள், எத்தனை வாசகர்கள் அதிகமானார்கள், எத்தனை பேர்களுக்கு வாசிப்பு இன்னும் கூடுதல் கவனிப்பு பெற்றன என்பதைத்தான் நாங்கள் சிந்திக்கிறோம்.

நாற்பதாவது இதழில் நாம் அறிமுகம் செய்த நூல் எத்தனை பேர்களின் கவனத்தை ஈர்த்திருக்கின்றன, அதை படிக்க வேண்டும் என்ற அனுபவத்தில் எத்தனை பேர் வாசகர்களானார்கள் என்ற தேடலின் பயனில் பலருக்கு உகந்ததாய் ஆயிற்று என்ற மகிழ்ச்சியோடு பேசும் பேனாக்கள் பக்கத்தில் வாசகப் பெருந்தகைகளின் எதிர்பார்ப்புக்கு தீனிப் போடும் செயல்பாட்டில் நான் பங்குதாரராகிறேன்.

“போதும் என்று நொந்துபோய், புதுவாழ்வைத் தேடுகிறீர்களா... ஒரு புதிய புத்தகத்தை வாங்கி வாசிக்கத் தொடங்கு...”
- இங்கர்சால்

“சில புத்தகங்களை சுவைப்போம்...
சிலவற்றை அப்படியே
விழுங்குவோம்...
சில புத்தகங்களை மென்று ஜீரணிப்போம்!”
- பிரான்சிஸ் பேக்கன்

“புரட்சிப் பாதையில் கைத்துப்பாக்கிகளை விட பெரிய ஆயுதங்கள் புத்தகங்களே...!”
- லெனின்

“உண்மையான வாசகன், வாசிப்பதை முடிப்பதே இல்லை!”
- ஆஸ்கார் வைல்ட்

வாசிப்பு பற்றிய நீண்ட கருத்துள்ள மிகச் சுருக்கமான வார்த்தை பிரயோகங்களை மொழிந்த சில பெருந்தகைகளின் கருத்துக்களை உங்கள் பார்வைக்கு காட்சிப்படுத்திக் கொண்டு, துணிந்தெழு சஞ்சிகையின் நூல் அறிமுகப் பகுதி ஊடாக பல்வேறுபட்ட நூல்கள் தொடர் வரிசையில் அறிமுகப்படுத்தப்படுகின்றன. அவைகள் நிச்சயம் யாரோ ஒருவருக்கு எங்கோர் இடத்தில் எப்போதோ ஒரு நாள் நிச்சயம் உதவியாகவும் இலகுவாகவும் இருக்கும் என பல்வேறுபட்ட கருத்து மோதல்களுக்கு மத்தியில் நகர்த்திச் செல்ல நேரிடுகிறது, காரணம் ஆக்க ஆசிரியர் நூல்களோடு அதிகம் உறவாடக் கூடியவர். நூல்களை அதிகம் நேசிக்கக் கூடியவர். நூல்கள் மீதான பார்வையை எந்நேரமும் கேள்வி அணுக்களாக வீசக்கூடியவர். அவரின் பேச்சுக்களுக்கு கிடைத்த விடையாக கூட அறிமுகம் செய்யும் நூல்கள் இருக்கலாம் என நம்பப்படுகிறது.

வாசிப்பை மேம்படுத்த வேண்டும். காலங்கள் எவ்வளவு தான் தனது இருப்பிடத்தை மாற்றிக் கொண்டாலும் எவ்வளவுதான் வளர்ச்சியின் உச்சத்தால் மாறுவேடம் போட்டுக் கொண்டாலும் எழுத்தும் வாசிப்பும் ஒரு மனிதனை முழுமைப்படுத்தும் என்ற கோட்பாட்டை மீறி செயல்பட முடியாது என்பதை மிக உறுதியாக சொல்லும் ஒரு வழிப்போக்கனின் நூல் அறிமுகம் இது.

நிச்சயமாக இந்த நூல் அறிமுகம் என்பது நூல் ஆசிரியர்களையோ வெளியீட்டாளர்களையோ திருப்திப்படுத்துவதற்காக அல்ல. பாரபட்சமின்றி நிறை குறைகள் இங்கு சொல்லப்படுகின்றன. அதிலும் மிக அதிகமாக நிறைமீது கவனம் செலுத்துகிறோம். எப்படியோ அவன் ஒரு வாசகராக வேண்டும் என்பது எங்களின் விடாப்பிடியான எண்ணமாகி போகிறது. இதில் நிச்சயம் நீங்களும் வாசகர்கள் ஆகலாம் அல்லது வாசகனை உருவாக்கும் பாதையை உருவாக்கும் ஒருவராக மாறலாம் என்பதில் ஐயம் கிடையாது.

இம்மாதம் அறிமுகம் செய்யும் நூல்கள் வரிசையில் இருப்பதனை உங்கள் பார்வைக்கு கொண்டு வருகிறேன். முதலாவது பிரதி இலக்கிய செயற்பாட்டாளர், கவிஞர், எழுத்தாளர், விமர்சகர் என பல்வேறு ஆளுமைகளை கொண்ட கலாபூசணம் பீ.ரீ.அஸீஸ் அவர்கள் எழுதிய கிராமிய சுகந்தமெனும் நூலும் இரண்டாவதாக இளம் எழுத்தாளர் மக்கொனையூராள் எனும் புனைப்பெயரில் எழுதும் பர்ஹானா அப்துல்லாஹ் எழுதிய நிஷாந்தம் எனும் கவிதை பிரதியும் ஆகும்.

இரு நூல்கள் பற்றிய அறிமுக உரையினை மிக ரத்தினச் சுருக்கமாக தருகிறேன். இரு நூல்களையும் நூலாசிரியரிடம் அல்லது வெளியீட்டாளர்களிடம் பெற்று படித்து நூல்களுக்கான விமர்சனத்தினை துணிந்தெழு சஞ்சிகை நூல் விமர்சனப் பகுதிக்கு எழுதி அனுப்புங்கள்.

அல்லது நீங்கள் ஓர் எழுத்தாளராக இருப்பின் உங்களுடைய நூல்கள் எமது சஞ்சிகையில் இடம்பெற வேண்டுமாக இருந்தால் உங்களுடைய நூல்களை தபால் மூலம் எமக்கு அனுப்பி வைக்கவும் முடியும்.

**நூல்களை தபால் மூலமாக அனுப்பி வைக்க :**
**துணிந்தெழு சஞ்சிகை ,**
**பேசும் பேனாக்கள்.**
**எம்.ஜே . ஜவ்சன் அஹமட்**
**148,வீசீ வீதி பெரிய நீலாவணை 02**
**மருதமுனை.**
**0760200387**




## 01

01. நூல் :- கிராமிய சுகந்தம்
நூலாசிரியர் :- பீ.ரீ. அஸீஸ்
வகை :- நாட்டார் கலை இலக்கியம்
வெளியீடு :- பேனா பப்ளிகேஷன் கிண்ணியா
உரிமை :- ஆசிரியருக்கு
நூலாக்கம் :- பரணி அச்சகம், நெல்லியாடி
பக்கங்கள் :- 88
முதல் பதிப்பு :- 2021
விலை :- 400/= ரூபாய்

கலாபூஷணம் பீ.ரீ. அஸீஸ் அவர்களால் எழுதப்பட்ட நாட்டார் கிராமிய கவிகளில் எழுத்துரு கவிகளில் முக்கியத்துவம் அதன் தேவைப்படும் பொதிந்த நூலாகும்.

இது நூலாசிரியரின் பதிப்பில் எட்டாவது நூலாக படைப்பாக்கம் பெறுகிறது. நூலாசிரியரை பொறுத்தவரையில் கவிதைகளோடு மட்டும் தன் இலக்கிய வடிவமைப்பை நிறுத்திக் கொள்ளாமல் சிறுகதை, பாடலாக்கம், சிறுவர் படைப்பு, கிராமிய மற்றும் நாட்டார் கலை, கட்டுரை, ஆய்வு கட்டுரைகள், விமர்சனம் என பல்வேறு திசைகளிலும் பயணிக்கின்ற ஒருவர்.

ஆவணப்படுத்த வேண்டிய இந் நூல் எழுத்துரு பெற்றிருப்பது ஒரு வரப்பிரசாதம் என நினைப்பதன் பயனாக நூலை வாசிக்கின்ற போது சுமார் 23 தலைப்புகளாக இந்த நூல் பிரிக்கப்பட்டிருப்பதை காணக் கிடைத்தது.

கவிதைகள் பற்றிய ஆய்வோடு நகர்கின்ற இந்த நூல் எழுத்துரு கவிகளின் முக்கியத்துவத்தோடு நூலின் உள்ளடக்க விபரம் போன்ற பல்வேறு கூறுகளை இங்கு காட்சிப்படுத்துகிறது. அதற்குப் பின்னரான தலைப்புகள் நாட்டுப்புற இலக்கியங்களைப் பற்றியதாக மிகக் கூடுதல் கவனம் பெறுகிறது.

நாட்டார் இலக்கியத்தை இங்கு கோலூன்றச் செய்ய வேண்டும். அதன் ஆரம்பமும் முடிவும் அது இன்று வரை நிலைத்திருப்பதற்கான சான்றுகள் என்பனவற்றை உதாரணங்களோடும் ஆய்வு முடிவுகளோடும் மிக அழகாகவும் தெளிவாகவும் இங்கு எழுதியிருக்கிறார்.


அது மட்டுமல்லாமல் கிராமிய இலக்கியங்கள் அல்லது நாட்டார் பாடல்கள் வாய்மொழி மூலமாக தோற்றங்களாக மட்டும் இருந்து, பின்னர் ஏன் எழுத்து உருவாக்கப்பட்டது, அதன் பின்னணி என்ன, அதில் இலக்கிய எழுச்சி என்ன, பாரதியாருக்கும் நாட்டார் பாடலுக்கும் இடையிலான தொடர்பு, எழுத்து மொழிக்கு முன்பாக என்ன ஜாதகங்கள் செய்கிறது என்பனவற்றை மிக அழகாக சொல்லுகிறார் நூலாசிரியர் இந்த நூலில்.

இந்த நூலை படிக்கின்ற போது, ஒரு பிரதேச வழக்கு நாட்டார் பாடல் எப்படி இடம்பெற்று இருக்கிறது என்ற ஓர் அழகான செய்தியும் இங்கு 64 ஆவது பக்கத்தில் தொடர்ச்சியில் வாசகர்களுக்கு காத்திருக்கிறது. அது மட்டுமல்லாமல் பல்வேறு நாட்டாரியல் தற்கால எழுத்தாளர்கள் பற்றியும் இங்கு ஆசிரியர் சற்று அலசி ஆராய்ந்து இருப்பது இந்நூலின் மீது இன்னும் கூடுதல் கரிசனையை ஏற்படுத்துகிறது.

கிழக்குப் பிரதேசத்தை மையப்படுத்தி பல்வேறு ஊர்களில் உள்ள இளம் அல்லது தேர்ச்சி பெற்ற எழுத்தாளர்களின் வரிசையில் அவர்கள் இயற்றிய நாட்டால் பாடல்களை இங்கு பதிவு செய்திருப்பது எமது இலக்கியப் பண்பாடு பாதுகாப்புப் பெற நல்லதொரு சந்தர்ப்பம் என்று கூற வேண்டும்.

வளர்ந்து வரும் தலைமுறை அதற்கு அடுத்த தலைமுறை அதற்கு அடுத்த தலைமுறை என ஒவ்வொரு தலைமுறையினரும் இந்த நூலை கட்டாயம் படிக்க வேண்டும் என்பது இந்நூலை வாசிக்கின்ற போது நான் கண்ட அனுபவமென்றே சொல்ல வேண்டும். நீங்களும் இந்த நூலை நூலாசிரியரிடம் பெற்று படித்து உங்கள் அனுபவங்களை கூர்மைப்படுத்திக் கொள்ளுங்கள்.






02

02. நூல் :- நிசாந்தம்

நூலாசிரியர் :- பர்ஹானா அப்துல்லாஹ்

வகை :- கவிதைகள்

வெளியீடு :- அக்கினிச் சிறகுகள்

உரிமை :- ஆசிரியருக்கு

நூலாக்கம் :- அக்கினிச் சிறகுகள்

பக்கங்கள் :- 37

முதல் பதிப்பு :- செப்டம்பர் 2021

பர்ஹானா அப்துல்லாஹ் நூல் வெளியீட்டு கனவை நனவாக்கும் விதமாக அவரது கன்னி நூல் பிரசவத்திற்கு இடம் கொடுக்கிறது அக்கினிச் சிறகுகள் சஞ்சிகை.

சுமார் தேர்ந்தெடுக்கப்பட்ட 30 கவிதைகளை உள்ளடங்களாக கொண்டு, அவற்றிற்குரிய புகைப்படங்களோடு இக்கவிதை கவிதையாக்கம் பெற்று, நூல் வடிவம் பெற்றிருக்கிறது. இதில் பல்வேறு வகையான தலைப்புகள் இடம் பெறுகின்றன. நாட்டை மையப்படுத்தியதாகவும் மதத்தை மையப்படுத்தியதாகவும் ஆசிரியர்களை மையப்படுத்தியதாகவும் பல்வேறு உணர்வுகள் ரீதியான தலைப்புக்களை இங்கு காணும் படியாக இருக்கிறது.

நூலாசிரியரின் கன்னி நூல் என்று சொல்வதை விட நன்கு எழுத்தின் மீதும் எழுத்துக்களை தெரிவு செய்வதன் மீதும் கவித்துவ சிந்தனையின் மீதும் ஆற்றல் கொண்ட ஒருவரினால் எழுதப்பட்டிருக்கும் நூல் என்றே இதை வாசிக்கின்ற போது தோன்றுகின்றது.

நூலாசிரியருக்கு இது கன்னி நூல். ஆனால் அவரது கன்னி கவிதைகள் அல்ல. அவர் நன்கு கவிதையின் மீது தேர்ச்சி பெற்றவர் என்பதற்கு அவரது இந்த நூல் ஒன்றே சாட்சி பகிரும் என்பது, நீங்களும் படிக்கும் போது புரிந்து கொள்ளவும் உணர்ந்துகொள்ளவும் முடியும் என்பதை சொல்கிறேன்.

சமூக வலைத்தளங்களின் ஊடாக தமது ஆக்கபூர்வமான கருத்துக்களையும், கவிதைகளையும் சொல்லுகின்ற இவர் இந்த நூலில் இளமையில் வறுமை எனும் தலைப்பில் எழுதி இருக்கும் கவிதை ஒட்டுமொத்த புத்தகத்தை படிக்கின்ற போதும் வேறு ஒரு திசைக்கு என்னை கூட்டிச் செல்கின்ற கவிதையாக என்னால் கருத முடிகிறது. அனுபவ ரீதியாக வறுமையை சுவாசித்த ஒருவரால் மட்டும் எழுத முடியுமாக இருக்கின்ற இந்த வரிகளை நூலாசிரியர் எப்படி எழுதி இருப்பார் என்ற யோசனைக்குள் சிறிது நேரம் நான் தள்ளப்படுகிறேன்.

இப்படி பல சுவாரஸ்யமான பல ஆச்சரியப்படத்தக்க கவிதைகள் இங்கு இடம் பெற்றிருக்கின்றன. அதையும் கடந்து அந்த கவிதைகளுக்கான மிக அழகான

புகைப்படங்களும் காட்சிப்படுத்தப்படுகிறது. எல்லோரும் இந்த புத்தகத்தை விரும்பி படிப்பீர்கள் என நம்புகிறேன்.

படித்துவிட்டு உங்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை பகிருங்கள்.

ஆக்கம் :-
கவிப்பொய்கை
ஜவ்சன் அஹமட்
துணிந்தெழு சஞ்சிகை

# சஞ்சிகை விமர்சனம்

## துணிந்தெழு சஞ்சிகை 40 ஆவது இதழ் பற்றி கவிதாயினி மாஜிதா தவ்பீக் மருதமுனை

துணிந்தெழு என்ற சஞ்சிகையின் பெயரே துவண்டு கிடப்போரைத் தட்டியெழுப்பி மனதில் உற்சாகத்தையும் ஊக்குவிப்பையும் தருகிறது. பெயருக்கேற்ப எதிர்காலம் சஞ்சிகையின் முன்னெடுப்பில் தெரிகிறது. நாற்பதைத் தாண்டி நாற்பத்தோராவது இதழைப் பிரசவிக்கும் இச்சஞ்சிகை பல தரமான இதமான ஆக்கங்களைத் தந்துள்ளன.

ஆளுமை அறிமுகம் ஆற்றலுள்ள பெண்களின் திறமையையும் முயற்சியையும் வெளிக்காட்டுகிறது. ஏனைய பெண்களும் இதனைப் பார்த்து ஆர்வம் கொள்ள நல்லதோர் நடையாகும்.

பேசும் பேனாக்கள் என்ற பகுதியும் மிகவும் நன்று. வாசிப்பு என்பது மனிதனை முழு மனிதனாக்கும் களஞ்சியம். வாசிக்க வாசிக்க கற்கண்டு போல் சொற்கொண்டு ஊறும்.

மேலும் காகிதக் காடு என்ற நூல் அறிமுகம் தேவையான பக்கமே. பக்கம் பக்கமாக பார்வைக்கு பசிதரும் சத்தான ஆக்கங்கள்.

இலங்கையில் எத்தனையோ சஞ்சிகைகள் வெளியாகின்றன. அத்தனையும் எமக்குக் காணக் கிடைப்பதில்லை. துணிந்தெழு சஞ்சிகையின் தேடலைக் கொண்டு நாம் அவைகளைத் தெரிந்து கொள்ள துணிந்தெழுவோம். கவியாளர் விருதும் இளங்கலைஞர் விருதும் பெற்ற பாடலாசிரியருடனான பேட்டி மிகச் சிறப்பு.

மேலும் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திடும் சல்லித்தீவு கடற்கரை பற்றிய அறிமுகமும் அளவளாவலும் மிகவும் பொலிவாகவும் விபரமாகவும் அதன் அழகை வலுவூட்டும் காட்சியுடனும் மேயப்பட்டிருந்தது சிறப்பம்சமே. காண்போரைக் கவரும் சல்லித்தீவுக் கடற்கரைப் பகுதியை அறியாதோர் தெரியாதோர் அறிந்து கொள்ள நயமானது. இப்படி அரிய பல இடங்களை துணிந்தெழு சஞ்சிகையில் அறிமுகம் செய்வது சஞ்சிகைக்கு சிறப்பம்சமாகும்.

மேலும் காத்திரமான கருத்துக்களைக் கொண்ட போதையே அதன் கேட்டினை கவிதையால் விமர்சிக்கும் விதம் அபாரம். யதார்த்தமான வைர வரிகள். மேலும் அடைமழை, கோளும் புறமும், பரீட்சைப் பெறு பேறு போன்ற உயிரோட்டமான நடையில் பின்னப்பட்டிருக்கும் வரிகள் பூரிக்க வைக்கின்றன.

இது சஞ்சிகைக்கு புதுக்கோலமிடுகின்றது. அதிகாரத் துஷ்பிரயோகம் என்ற கதையும் வித்தியாசமான கோணத்தில் தெரிகிறது. மேலும் சஞ்சிகையின் சிறுவர் பகுதிக்குள் நுழைந்த போது அங்கு வாசிப்பின் அவசியத்தை அருமருந்தாக உணர்ந்து கொள்ளும் உயிரோட்டமான உயரிய கருத்துக்கள் அங்கு பதியப்பட்டிருந்தது. கண்களுக்கு விருந்தும் சிறுவர்களுக்கு மருந்துமாய் காண்கிறது. கட்டுரையை எழுதிய சகோதரிக்குப் பாராட்டுக்கள்.

மேலும் அனைத்து ஆக்கங்களும் சிறப்பானதாகவே காணப்பட்டன. இன்னும் பல ஆக்கங்களை அதிர்வலைகளோடு நாற்பத்தோராம் இதழில் மலரட்டும். எங்கும் அதன் மணம் பரவட்டும். துணிந்தெழு சஞ்சிகையை தொடர்ந்து கொண்டு செல்லும் அதன் ஆசிரியர் எம்.எஸ்.எம்.ஸாகிர் அவர்களுக்கு ஒரு ஷபாஸ்...



கவிதாயினி
மாஜிதா தவ்பீக்
மருதமுனை

# கானகத்தின் ஒற்றை மழைத்துளி



நேற்று உன் விரல்பற்றி நடந்து
கொண்டிருக்கிறேன்
மனமெங்கும் மல்லிகைத் தோரணம் தான்

அழகியல் என்றொரு இதழியலில்
எனக்குத் தனியியல் நீ

அந்தச் சாலையோரச் சந்திப்பில்
மரங்கள் இயல்பாய் பன்னீர் தூவுகிறது
பறவைகளின் இசையமுதினை சேர்ந்தே
சுவைத்தோம் சுகித்தோம்

மெல்ல வந்தமர்ந்த வண்ணத்துப்பூச்சி
குழம்பிய நொடிதனில் நீயுதிர்த்த குறுநகை
கோடி பெறும்

நீ நிமிர்கையில் நீல வான்
ஆகிறது ஆம்பலென

உன்னோடு கதைத்தவைகள் எல்லாம் எனது
நாட்குறிப்பில் நிறைகின்றன

சேர்ந்து அமர்ந்து உண்டதில் உணவெது
அமிர்தமெதுவென நா ருசி குழம்பிய
இதங்களை என்னவென்பது


இம்சைகளை அவஸ்தைகளை
எடுத்தியம்பலோ புரியவைத்தலோ மைவிழி
மையலின் முன் அவ்வளவு எளிதானதல்ல

மௌனித்தே கிடக்கிற காதலின் கதவோரம்
நிறைநாட்கள் நின்றிருக்கிறேன்

ஏதாகினும் விரல் பற்றிட நீயிருக்கும்
இப்பெருநிலத்தில்
பற்றிக்கொள்கிறது என் காதலின்
பெருங்காடு.

**குத்சியா இம்தியாஸ்**
**வேப்பமடு**
**புத்தளம்**

# அங்கமெடில்லா தேசிய பூங்கா



இலங்கையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பூங்காக்களில் இதுவும் ஒன்றாகும்.

2006 ஜுன் மாதம் 6 ஆம் திகதி அங்கமெடில்லா தேசிய பூங்காவாக பிரகடனப்படுத்தப்பட்டது.

முதலில் அங்கமெடில்லா மின்னேரியா-கிரித்தலே சரணாலயத்தில் இருந்து பெப்ரவரி-13, 1988 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட ஒரு வனப் பகுதியாக காணப்பட்டது.

முக்கியமாக பராக்கிரமபாகு சமுத்திரத்தின் வடிகால் படுகையைப் பாதுகாப்பதற்காக இந்த பூங்கா உருவாக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

நேரத்தை செலவிடவும் இயற்கையை ரசிக்கவும் இது ஒரு நல்ல இடமாக சுற்றுலா பயணிகளால் அண்மை காலமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.



இத்தேசிய பூங்கா பொலன்னறுவை மாவட்டத்திலிருந்து 21 கிலோமீட்டர் தூரத்தில் காணப்படுகின்றது.

கொழும்பிலிருந்து இத்தேசிய பூங்கா 198 கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது.

பூங்காவின் குறுக்கே கிரித்தலேயிலிருந்து மின்னேரியா வரை ஓர் அழகிய மலைத்தொடர்கள் நீண்டு காணப்படுகின்றது. வறட்சி காலத்தில் பூங்கா மிகவும் வறண்டு காணப்படுவதோடு மழைக்காலத்தில் சமவெளிப் பகுதியை விட மலைப் பகுதிகளில் அதிக மழை பொழிகிறது. பூங்காவில் ஈரமான மற்றும் வறண்ட காலநிலை தொடர்ந்து இருப்பதால், தாவரங்கள் ஈர மண்டலம் மற்றும் உலர் மண்டல தாவரங்களின் கலவையாகவும் காணப்படுகின்றது.

குறிப்பாக பழங்காலத்தில் அம்பன் ஆற்றில் இருந்து பராக்கிரம சமுத்திரத்திற்கு கல்லில் செய்யப்பட்ட கால்வாயில் நீர் பாசனம் செய்யப்பட்டது. கால்வாயின் பாறைகளான சுவரை கிராம மக்களால் அரச சுவர் என்றும் அழைக்கப்பட்டது.

இத்தேசிய பூங்காவில் யானைகள், இலங்கை சாம்பார் மான், இந்திய முண்ட்ஜாக், இலங்கை அச்சு மான், நீர் எருமை, காட்டுப்பன்றிகள் மற்றும் மயில்கள் ஆகியவை பூங்காவில் பொதுவாக காணப்படுகிறது. இருப்பினும் இலங்கைச் சிறுத்தை, சோம்பல் கரடி, அருகிவரும் ராட்சத அணில் மற்றும் இலங்கை காட்டுப் பறவைகள்










சில சமயங்களில் காணப்படுகின்றன. மெல்லிய லோரிஸ், ட.்.ப்ட் க்ரே லாங்கூர் மற்றும் ஊதா முகம் கொண்ட லங்கூர் வகை குரங்குகள் ஆகியவையும் காணப்படுகின்றன.

புராதன சிறப்புமிக்க நகராக பொலன்னறுவை மாவட்டம் காணப்படுகின்றது. இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க இடத்தில், மிகுதியாகப் பாயும் அம்பன் ஆறு இரண்டாகப் பிரிகிறது. அதன் கிளைகளில் ஒன்று பராக்கிரம சமுத்திரத்தில் கலக்கின்றது. தற்போது கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் சேனநாயக்கர்களால் கட்டப்பட்ட நீர்ப்பாசனப் பணிகள் இங்கு முக்கியத்துவம் வாய்ந்தவை.

ஆனால் கடந்த மன்னர்களால் கட்டப்பட்ட நீர்ப்பாசனப் பணிகளின் பகுதிகள் இன்னும் உள்ளன. வஸ்கமு காட்டின் நடுவில் அமைந்துள்ள இந்த இடம் மிகவும் அழகானது. மழைக்காலத்தில் (நவம்பர், டிசம்பர், ஜனவரி) அங்கமெடில்லா மிகவும் செழிப்பாக காணப்படும். இயற்கை ஆர்வலர்கள் இந்த பசுமையான மரங்களையும் அழகிய நீர்நிலைகளையும் விட்டுச் செல்ல நினைக்காத அளவுக்கு இந்த இடம் அழகு பெறுகின்றது. அம்பன் ஆற்றின் நடுவில் உள்ள அங்கமெடில்லாவில் இருந்து பார்க்கும் வசீகரமான பெரிய மரம் சுற்றுப்புற அழகை மேலும் மேலும் மெருகேற்றுகிறது.

பாரம்பரிய பொலன்னறுவை பயணத்தில் இருந்து விலகி அழகான, கறைபடாத வனாந்திரம் வழியாக பொலன்னறுவை செல்ல விரும்புவோருக்கு அங்கமெடில்லா ஓர் அழகான விடுதி இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

எப்படி அணுகுவது கிரித்தலே வீதியில் பகமூனையிலிருந்து வரும்போது, அத்தனகடவல பகுதியிலிருந்து வலதுபுறம் திரும்பவும் (உள்ளூர்வாசிகளின் கூற்றுப்படி) சிறிது அளவிலான நிலக்கீல் சாலையில் 1 கி.மீ. 12-15 நிமிடங்களுக்குப் பிறகு வஸ்கமுவ தேசிய பூங்கா மற்றும் சாலையின் எல்லையாக இந்த இடத்தைப் பார்த்தோம்.

பராக்கிரம கடற்பரப்பில் உள்ள பராக்கிரம கடலை கண்டும் காணாத வகையில்

பொலன்னறுவையிலிருந்து அங்கமெடில்லாவை அடையலாம். இந்த சாலைப் பிரிவு கிட்டத்தட்ட 20 கி.மீ. அங்கமெடில்லாவுக்கு அருகிலுள்ள பகுதியாக காணப்படுகின்றது. அருகிலுள்ள பிற இடங்கள் அங்கமெடில்லா தேசிய பூங்காவிற்கும் வாஸ்கமுவ தேசிய பூங்காவின் எல்லையாக அமைந்துள்ளது.

தங்க வசதிகளாக அங்கமெடில்லா பகுதியில் வனவிலங்குகள் திணைக்களத்திடம் அமைக்கப்பட்ட சுற்றுலா விடுதியும் காணப்படுகின்றது. அதனை முன்கூட்டியே அனுமதி பெறலாம். மேலும் பொலன்னறுவையில் தங்குமிட வசதிகள் எளிதாகக் காணப்படுகின்றது. அருகிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் பொலன்னறுவை, கதுருவெலவில் அமைந்துள்ளது. உங்கள் பயணத்தை திட்டமிட்டு சிறப்பாக அமைத்துக் கொள்ளுங்கள்.








ஆக்கம்:


**எஸ்.ஐ.எம்.நிப்ராஸ் ( JP),**

**ஊடகவியலாளர்**

# வாய்ப் புற்று நோயிலிருந்து பாதுகாப்புப் பெறுவோம்



Dr. Farwin A. Cader
Dental surgeon
BDS (Peradeniya), PgDHDP (Colombo)
Base Hospital/kalmunai




## புற்றுநோய் என்றால் என்ன?

இது உடற் கலங்கள் உடலின் கட்டுப்பாடின்றி தன்னிச்சையாக, அசாதாரண முறையில் பெருக்கம் அடைவதால் ஏற்படும் வளர்ச்சிகள் அல்லது கட்டிகள் எனக் கொள்ளலாம். புற்றுநோய் எமது உடலின் எப்பகுதியிலும் ஏற்படலாம். அவ்வாறே வாய்குழியில் ஏற்படும் புற்றுநோயானது வாய் புற்றுநோய் ஆகும்.

## வாய்ப்புற்று நோய் ஏற்படுவதற்கான காரணிகள்

- வெற்றிலை, பாக்கு, புகையிலை மற்றும் சுண்ணாம்பு போன்றவற்றை மெல்லுதல்
- சுருட்டு, சிகரெட் மற்றும் பீடி புகைத்தல், மதுபானம் அருந்துதல்.
- அதிக உறைப்பான மற்றும் சூடான உணவுகளை உண்ணுதல்.
- ஒழுங்கற்ற வாய் சுகாதாரம்.
- வாய்க்குழி மேலணியானது தொடர்ந்து உறுத்துதலுக்கு அல்லது உராய்வுகளுக்கு உள்ளாதல்.
- சூரிய ஒளியின் அல்ட்ரா வயலட் (UV) கதிர்த் தாக்கம்.
- போஷாக்கு குறைந்த உணவு உட்கொள்ளல்.

## வாய் புற்றுநோயின் அறிகுறிகள்

- வாய்க் குழியில் காணப்படும் உயர்ந்த, தடித்த, வெண்ணிறமான அல்லது செந்நிறமான தழும்புகள்.
- வாய் குழியின் மேலணிக் கவசத்தோல் கழன்று போதல்.

• உதடுகளிலோ அல்லது வாய்க் குழியிலோ வளரும் தசை தொகுதி.

• பலகாலம் மாறாது நிலைத்திருக்கும் வாய்ப்புண்.

• உணவை மெல்லுவதிலோ விழுங்குவதிலோ ஏற்படும் சிரமம்.

• வாய் குழியில் இரத்தக் கசிவு ஏற்படல்

• பற்களின் உறுதித் தன்மை தளருதல்.

### மிகவும் பிந்திய நிலைகளில்

• தாடையை அசைப்பது கஷ்டம்.

• நாக்குப் பூரணமாக அசைக்க முடியாத நிலையில் வாய்க் குழியுடன் ஒட்டப்படுதல்.

• கழுத்துப் பகுதியின் நிணநீர் கணுக்கள் வீக்கம் அடைதல்.

### வாய்ப் புற்று நோயிலிருந்து எம்மை பாதுகாக்க நாம் செய்ய வேண்டியது

• வெற்றிலை, பாக்கு பாவிக்கும் பழக்கத்துக்கு ஆளாகாதிருத்தல்.

• சிறிய வயதினருக்கு வெற்றிலை, பாக்கு பாவிப்பதால் ஏற்படும் தீமைகளை எடுத்துக் கூறி அவர்களை தடுத்தல்.

• மதுபானம் அருந்துவதை தடுத்தல்.





• புகைத்தலை கைவிடுதல்.

• வாய் சுகாதாரத்தை நன்கு பேணுதல்.

• உடைந்த மற்றும் சூத்தையால் பாதிக்கப்பட்ட பற்களுக்கு தகுந்த சிகிச்சை அளித்தல்.

• கிரமமாக பல் துலக்குதல்.

• அதிகளவான மிளகாய்த்தூள் மற்றும் பிற காரப் பதார்த்தங்கள் பாவிப்பதை நிறுத்துதல்.

• மரக்கறி வகைகளையும் மஞ்சள் நிற பழங்களையும் அதிக அளவில் உண்ணுதல்.

• ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை ஆயினும் பல் மருத்துவரை சந்தித்து உங்கள் பற்கள் மற்றும் வாய்க்குழியை பரிசோதித்தல்.

**தொகுப்பு :**
**ஷாமென் நிஸாம்டீன்**
**துணிந்தெழு சஞ்சிகை**

# மின்னணு கழிவுகளிலிருந்து தங்கத்தை மீட்டெடுக்க புதிய வழி அவுஸ்திரேலிய விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பு..!

அவுஸ்திரேலியாவின் ஃபிளிண்டர்ஸ் பல்கலைக்கழக (Flinders University) ஆராய்ச்சியாளர்கள் மின்னணு கழிவுகளிலிருந்து (e-waste) தங்கத்தைப் பிரித்தெடுக்க ஒரு புதுமையான, சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் செலவு குறைந்த முறையை உருவாக்கியுள்ளனர்.

இந்த குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்பு மின் கழிவு மேலாண்மை மற்றும் தங்கம் பிரித்தெடுத்தல் துறைகளில் ஒரு முக்கிய முன்னேற்றமாக கருதப்படுகிறது.



## புதுமையான தொழில்நுட்பம்

ஃபிளிண்டர்ஸ் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கிய இந்த புதிய முறை, பாலிமர்கள் (Polymers) மற்றும் போட்டோ கெமிக்கல் ரியாக்ஷன்ஸ் (Photochemical Reactions) ஆகிய தொழில்நுட்பங்களை ஒருங்கிணைக்கிறது. இது மின்னணு கழிவுகளிலிருந்து தங்கத்தை திறம்பட மீட்டெடுக்க உதவுகிறது.

## எப்படி வேலை செய்கிறது?

சிறப்புப் பாலிமர்கள் : இந்த முறையில், தங்கத்துடன் பிணைக்கப்படும் ஒரு சிறப்பு வகை பிளாஸ்டிக் பாலிமர் பயன்படுத்தப்படுகிறது. இது தங்கத்தை மற்ற அசுத்தங்களிலிருந்து தனித்துப் பிரிக்க உதவுகிறது.

## போட்டோ கெமிக்கல் எதிர்வினைகள்:

தங்கம் பாலிமரால் உறிஞ்சப்பட்ட பிறகு, சூரிய ஒளி படும்போது ஒரு வேதியியல் எதிர்வினை தூண்டப்படுகிறது. இந்த எதிர்வினை தங்கத்தை பாலிமரிலிருந்து பிரித்து, தூய தங்கமாக மீட்டெடுக்க உதவுகிறது.

## இந்த முறையின் முக்கிய சிறப்பம்சங்கள்

• பாதுகாப்பானது : பாரம்பரிய தங்கம் பிரித்தெடுக்கும் முறைகளில் பெரும்பாலும் சயனைட்டு போன்ற அதிக நச்சுத்தன்மையுள்ள ரசாயனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், இந்த புதிய முறை ஆபத்தான ரசாயனங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கிறது, இதனால் தொழிலாளர்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் ஏற்படும் அபாயங்கள் குறைகின்றன.

• செலவு குறைவானது : இந்த முறைக்கு விலையுயர்ந்த உபகரணங்கள் தேவையில்லை. மேலும் சூரிய ஒளியைப் பயன்படுத்துவதால் ஆற்றல் செலவும் கணிசமாகக் குறைகிறது. இது தங்கத்தை மீட்டெடுப்பதற்கான ஒட்டுமொத்த செலவைக் குறைக்கிறது.

• மீண்டும் பயன்படுத்தக்கூடியது : இந்த செயல்முறையில் பயன்படுத்தப்படும் சில ரசாயனங்களை மீண்டும் பயன்படுத்த முடியும். இது இம்முறையை மேலும் நிலையானதாக்குகிறது.

• பூல் கிளீனர் ரசாயனம் : ஒரு புதுமையான அம்சமாக, "பூல் கிளீனர்" என்று அழைக்கப்படும் ஒரு ரசாயனம் சூரிய ஒளியுடன் இணைந்து தங்கத்தை மீட்டெடுக்கப் பயன்படுத்தப்படுகிறது. இது பாதுகாப்பான மற்றும் சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்காத ஒரு மாற்றாகும்.

## இந்த கண்டுபிடிப்பு ஏன் முக்கியம்?

• சுற்றுச்சூழல் பாதுகாப்பு : நச்சு ரசாயனங்களின் பயன்பாட்டைக் குறைப்பதன் மூலம், இந்த முறை சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்பைக் குறைக்கிறது.





• பொருளாதார ரீதியாக லாபகரமானது : இது தங்கத்தை பிரித்தெடுக்கும் செலவைக் குறைத்து, பொருளாதார ரீதியாக மிகவும் லாபகரமானதாக அமைகிறது.

• இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் : மின்னணு கழிவுகளிலிருந்து விலைமதிப்பற்ற உலோகங்களை மீட்டெடுப்பது, புதிய தங்கம் தோண்டி எடுப்பதற்கான தேவையைக் குறைத்து, நமது இயற்கை வளங்களைப் பாதுகாக்க உதவுகிறது.

• நிலையான தீர்வு : இந்த முறை அதிகரித்து வரும் மின் கழிவுப் பிரச்சினைக்கு ஒரு நிலையான தீர்வை வழங்குகிறது. பூமியைத் தோண்டி எடுப்பதற்குப் பதிலாக, ஏற்கனவே புழக்கத்தில் உள்ள மின்னணு சாதனங்களிலிருந்து தங்கத்தை மீட்டெடுக்க இது உதவுகிறது.

தொகுப்பாக்கம்:
**அஸ்ரி இப்னு அமீர்**
பிரதி முகாமையாளர்
துணிந்தெழு சஞ்சிகை

# மழைநாள்!



# சிறுவர் பகுதி





தொகுப்பு:
முனீரா வாஹித்

சின்னச் சின்ன மழைத்துளிகள்
மண்ணில் எழுப்பும் ஒலி அலைகள்
காற்றில் ஆடும் தாவரங்கள்
நனைந்து சிரிக்கும் பூமரங்கள்

குளிரும் சூழல் இதமாகும்
பொழியும் மழையும் சுகமாகும்
வீசிடும் சாரல் அழகாகும்
மாசுகள் எல்லாம் அகன்றோடும்

வீதியில் மழைநீர் விரைந்தோடும்
பீதியில் ஆடுகள் இடம் தேடும்
காகிதக் கப்பல் உருவாகும்
ஆஹா.. இன்பம் நிறைவாகும்

களைப்பு எல்லாம் கலைந்தோடும்
மழைநாள் எமக்கு வரமாகும்

**மக்கொனையூராள்**



## சிந்தனை துளிகள்.

நல்ல நண்பன் நறுமணத்திற்கு ஒப்பானவன். அவன் செல்லும் இடமெல்லாம் மணக்கும்.

பொய் சொல்வது உடனடி மகிழ்ச்சி தந்தாலும் நீண்ட நாள் நிலைக்காது.

மென்மையே மேன்மை தரும். ஆகவே உன்னிலிருந்து வன்மையை ஒழித்து விடு.

அனைவரிடமும் அன்பு கொள்! உள்ளங்களின் ஆயுள் நீடிக்கும்.


பலவீனம் தோல்வியின் அடித்தளம். அதில் நீ நிரந்தரமாக தங்கி விடாதே!

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

## உங்கள் விளம்பரங்களையும்
## குறைந்த கட்டணத்தில்
## இப்போதே பகிர்ந்து கொள்ளுங்கள்

0757000791 | +97431060249



#Thuninthelu www.skytamilnews.com